
# நெஞ்சில் பூத்தவை



கவியரசர் முடியரசன்

பூங்கொடி பதிப்பகம்

[illegible]
[illegible] 569 [illegible]
[illegible] - 630003
பேசி: 9965706699
9788804480

முடியரசன் பதிப்பகம்

காரைக்குடி

# நெஞ்சிற் பூத்தவை!

கவியரசர்

## முடியரசன்


[illegible]யரசர் முடியரசன் [illegible]
[illegible] எண்: 569, [illegible]
[illegible] - [illegible] 003



பூங்கொடி பதிப்பகம்

14. சித்திரைக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை—600 004.
தொலைபேசி : 4943074

## நூலின் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நெஞ்சிற் பூத்தவை |
| நூலாசிரியர் | : | கவியரசர் முடியரசன் |
| பொருள் | : | கவிதைகள் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர், 1999 |
| வெளியீடு | : | பூங்கொடி பதிப்பகம்<br>சென்னை-600 004. |
| பதிப்புரிமை | : | கலைச்செல்வி முடியரசன் |
| நூலின் அளவு | : | 18 செ. மீ. × 12.5. செ. மீ. |
| எழுத்து | : | 12 புள்ளி |
| தாள் | : | 11.2. கிலோ, |
| பைண்டிங் | : | செக்சன் பைண்டிங் |
| பக்கங்கள் | : | 92 + XVI = 108 |
| விலை | : | ரூ. 20–00 |
| அச்சிட்டோர் | : | அலைகள் அச்சகம்,<br>சென்னை-600 024. |

# பதிப்புரை

கவியரசர் முடியரசன் அவர்கள், பாரதிதாசன் பரம்பரைக் கவிஞராவார். 'கவியரசர்' என்பது இவர் தானே சூட்டிக்கொண்ட பட்டமல்ல; குன்றக்குடி அடிகளாரால், பாரி விழாவில் வழங்கப் பெற்றதாகும்.

முறைப்படி தமிழ் பயின்று, வித்துவான் பட்டம் பெற்ற இவர், 'நல்லாசிரியர்' விருது பெற்றிடும் அளவிற்கு அப்பணியைச் செய்து நன்மாணாக்கர் பலரையும் உருவாக்கிய பண்பாளர்.

பாவேந்தர் விருது, கலைஞர் விருது, கலைமாமணி விருதுகள் முதல்— இன்னும் பல விருதுகளை இவர் பெற்றதுண்டு.

1998இல் கவியரசர் மறைந்தபின்— இந்த 'நெஞ்சிற் பூத்தவை' இரண்டாவது நூலாக மலர்கின்றது. தமிழ் வாழ்த்து முதல் திரைப்பாடல் ஈறாகப் பல பாகு நிகர்த் கவிதைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

காலமாற்றங்கள் கவிதையிலும் வெளிப்படவேண்டும் எனச் சிலர் காசு பணத்திற்காகக் கங்கணம் கட்டிக் கொண்டு உள்ள இக்காலத்தில்— கன்னித் தமிழ் மணக்கக் கடைசி மூச்சுவரை எழுதி உயர்ந்த பெருமையாளர் கவியரசர் முடியரசன். அதே போல், கலப்பு மணம் புரிந்துகொண்டு சீர் இருத்தச் செம்மலாக வாழ்ந்துவந்தவரும் கூட.

இன்பத் தமிழ்மணக்கும் இந்நூலை, இந்த நூற்றாண்டு நிறைவில் வெளியிடுவதில் எங்கள் 'பூங்கொடி பதிப்பகம்' இறும்பூதெய்துகிறது.

—வே. சுப்பையா

உரிமையாளர்

பூங்கொடி பதிப்பகம்

# முன்னுரை

(முதற் பதிப்புக்குரியது)

உணர்ச்சிக்கு நான் ஆட்படும் பொழுதெல்லாம், அவ்வுணர்ச்சியை வெளிப்படுத்தித் தீர வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்படுவதுண்டு. அதன் வெளிப்பாடே இத்தொகுப்பிற் காணப்பெறும் கவிதைகள்.

எப்பொழுதோ பாடிய கவிதைகள் இவை; அவற்றை யெல்லாம் என் மகனும், மருமகளும் தேடியெடுத்தனர். உடல்நலங் கேடுறலால் இப்பொழுது புதியன புனைய இயலவில்லை. எனினும், ஒரிரு சமயங்களில் அவ்வுணர்ச்சிக்கு ஆட்படுவதுண்டு. அதன் வெளிப்பாடுகளும் பழைய வெளிப்பாடுகளும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இப்பாடல்கள் ஒருபொருள் பற்றியனவல்ல. பல்வேறு பொருள் பற்றியன; ஆதலின், மாலை போலமையாமல் தனித்தனிப் பாடல்களாகவுள்ளன. அதனால், இத் தொகுப்பு 'நெஞ்சிற் பூத்தவை' என்னும் பெயர் பெறுகிறது.

அனைவரும் நுகரலாம், அதன் மணம் பெறலாம். அதனால் இன்பம் உறலாம், நன்றி.

காரைக்குடி, அன்புள்ள,

25-10-1990. முடியரசன்



# கவியரசர் முடியரசன்-வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | துரைராசு |
| பிறந்த ஊர் | : | பெரியகுளம் |
| தோற்றம் | : | 7—10—1920 |
| பெற்றோர் | : | சுப்புராயலு-சீதாலெட்சுமி |
| வாழ்ந்த ஊர் | : | காரைக்குடி |
| இயற்கையடைவு | : | 3—12—1998 |
| கல்வி | : | பிரவேச பண்டிதம், மதுரைத் தமிழ்ச் சங்கம் (1934-39) வித்துவான், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி (1939-43) |
| பணி | : | தமிழாசிரியர், முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை (1947-49), மீ.சு. உயர் நிலைப்பள்ளி, காரைக்குடி (1949-78) |

| | | |
|---|---|---|
| திருமணம் | : 2—2—1949 (கொள்கை வழிக் கலப்புத் திருமணம்) | |
| துணைவியார் | : கலைச்செல்வி | |
| மக்கள் : | மருமக்கள் : | பேரப்பிள்ளைகள் : |
| குமுதம் | பாண்டியன் | அருள்செல்வம், திருப்பாவை |
| பாரி | பூங்கோதை | ஓவியம் |
| அன்னம் | சற்குணம் | செழியன், இனியன் |
| குமணன் | தேன்மொழி | அமுதன், யாழிசை |
| செல்வம் | சுசீலா | கலைக்கோ, வெண்ணிலா |
| அல்லி | பாண்டியன் | முகிலன் |

## இயற்றிய நூல்கள் :

| | | |
|---|---|---|
| முடியரசன் கவிதைகள் | (கவிதைத் தொகுதி) | 1954 |
| காவியப் பாவை | ,, | 1955 |
| கவியரங்கில் முடியரசன் | ,, | 1960 |
| பாடுங்குயில் | ,, | 1983 |
| நெஞ்சு பொறுக்கவில்லையே | ,, | 1985 |
| மனிதனைத் தேடுகிறேன் | ,, | 1986 |
| தமிழ் வழிபாடு | ,, | 1997 |
| தமிழ் முழக்கம் | ,, | 1999 |
| ஞாயிறும் திங்களும் | ,, | 1999 |
| நெஞ்சிற் பூத்தவை | ,, | 1999 |
| தாய்மொழி காப்போம் | ,, 2001 | அச்சில் |
| புதியதொரு விதி செய்வோம் | ,, 1999 | ,, |
| வள்ளுவர் கோட்டம் | ,, 1999 | ,, |
| மனிதரைக் கண்டுகொண்டேன் | ,, 2005 | ,, |
| பூங்கொடி | (காப்பியம்) | 1964 |
| வீர காவியம் | ,, | 1970 |
| ஊன்றுகோல் | ,, | 1983 |
| இளம் பெருவழுதி | ,, 2008 | |

அன்புள்ள பாண்டியனுக்கு (கடித இலக்கியம்) அச்சில்
இளவரசனுக்கு
எப்படி வளரும் தமிழ்? (கட்டுரைத் தொகுதி)
எக்கோவின் காதல் (சிறு கதைத் தொகுதி)
சீர்திருத்தச் செம்மல்
வை.சு. சண்முகனார் (கட்டுரை) 1990
பாட்டுப் பறவையின்
வாழ்க்கைப் பயணம் (தன் வரலாறு) அச்சில்

## தேடிவந்த சிறப்புகள்

(விருது/பட்டம்/பரிசு-வழங்கியது/இடம்-ஆண்டு)

- 'அழகின் சிரிப்பு' என்ற கவிதைக்கு முதல் பரிசு-பாவேந்தர் பாரதிதாசன் முத்தமிழ் மாநாடு, கோவை-1950
- 'திராவிட நாட்டின் வானம்பாடி' பட்டம்-பேரறிஞர் அண்ணா-1957
- 'கவியரசு' பட்டம் பொற்பதக்கம் - குன்றக்குடி அடிகளார், பாரி விழா, பறம்புமலை - 1966
- 'முடியரசன் கவிதைகள்' நூலுக்குப் பரிசு - தமிழ்நாடு அரசு - 1966
- 'வீர காவியம்' நூலுக்குப் பரிசு-தமிழ்நாடு அரசு-1973
- 'நல்லாசிரியர்' விருது, வெள்ளிப் பதக்கம்-கே.கே.ஷா, ஆளுநர், தமிழ்நாடு அரசு-1974
- 'சங்கப் புலவர்' பட்டம்-குன்றக்குடி அடிகளார்-1974
- 'பாவரசர்' பட்டம், பொற்பேழை - ஞா. தேவநேயப் பாவாணர், உலகத் தமிழ்க் கழகம், பெங்களூர்-1979
- 'பொற்கிழி' - பாவாணர் தமிழ்க் குடும்பம், நெய்வேலி - 1979
- 'பொற்குவை' - ரூ.10,000/- மணிவிழா எடுப்பு - கவிஞரின் மாணாக்கர்கள்- காரைக்குடி-1979
- 'பொற்கிழி' - பாரதியார் நூற்றாண்டு விழாக் குழு, சிவகங்கை

- 'கவிப் பெருங்கோ' பட்டம், பொற்கிழி ரூ. 10,000/- மணிவிழா எடுப்பு - கலைஞர் மு. கருணாநிதி, தி.மு.க. மாநில இலக்கிய அணி, சென்னை-1980
- 'தமிழ்ச் சான்றோர்' விருது, பதக்கம் — தமிழகப் புலவர்குழு, சேலம்-1983.
- 'கலைஞர் விருது' என். டி. இராமாராவ், ஆந்திர முன்னாள் முதலமைச்சர், கலைஞர் மு. கருணாநிதி, தி. மு. க. முப்பெரும் விழா, சென்னை-1984.
- 'பாவேந்தர் விருது' (1987க்குரியது) பொற்பதக்கம், கலைஞர் மு. கருணாநிதி முதல்வர், தமிழ்நாடு அரசு, சென்னை-1989.
- 'பொற்கிழி' - விக்கிரமன், அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தினர், காரைக்குடி- கவிஞர் இல்லம்-1993
- 'பூங்கொடி' நூலுக்கு, இந்திராணி இலக்கியப் பரிசு ரூ.5000/- இந்திராணி அறக்கட்டளை, கரூர்-1993.
- 'சிறந்த தமிழ்த் தொண்டிற்கான' அரசர் முத்தையவேள் நினைவுப் பரிசில் வெள்ளிப் பேழை, பொற்குவை ரூ. 50,000/- அண்ணாமலை அரசர் நினைவு அறக்கட்டளை, சென்னை-1993
- 'இராணா இலக்கிய விருது', பொற்குவை ரூ. 10,000/- தமிழ் இலக்கியப் பேரவை, ஈரோடு-1994
- 'கல்வி உலகக் கவியரசு' விருது - அகில இந்தியப் பல்கலைக் கழகம் தமிழாசிரியர் மன்றம், காரைக்குடி-1996 (அழகப்பா பல்கலைக் கழகம்)
- 'பொற்கிழி' - பழைய மாணவர் பாராட்டு விழா, கணேசன் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி-1997.
- 'கலைமாமணி' விருது 'பொற்பதக்கம்'- செல்வி பாத்திமா பீவி, ஆளுநர் - கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர், தமிழ்நாடு அரசு, சென்னை-1998.

## பிற குறிப்புகள் :

- இளம்பருவத்தில் கவிதை உணர்வை ஊட்டியவர் தாய்மாமன் துரைசாமி அவர்கள்.
- 20ஆம் அகவை வரைக் கடவுளைப் பற்றிய கவிதைகள் இயற்றினார். அவை கிடைத்தில (1939)
- 21ஆம் அகவை முதல் சமுதாயச் சூழல், மொழி, நாடு, இயற்கை இவற்றையே பாடிவந்தார் (1940).
- 21ம் அகவையில் இயற்றிய 'சாதி என்பது நமக்கு ஏனோ?' என்ற கவிதையே முதன் முதலில் அச்சு வாகனம் ஏறியது. இது பேரறிஞர் அண்ணாவால் 'திராவிட நாடு' இதழில் வெளியிடப்பட்டது (1940).
- தந்தை பெரியாரின் தன்மான இயக்கத் தொடர்பு (1940).
- தன்மான இயக்கத் தொடர்பால் 'வித்துவான்' தேர்வில் தோல்வியுறுமாறு செய்யப்பட்டார் (1943).
- புதுவை மாநிலத்திற்கு அருகில் உள்ள மயிலத்தில் தலைமறைவாக இருந்து படித்து 'வித்துவான்' பட்டம் பெற்றார் (1947).
- நவாபு டி. எஸ். இராசமாணிக்கம் நாடகக் குழுவில் பாடல், உரையாடல் எழுதும் பணி, அங்கிருந்த 'சிறை வாழ்க்கை'யும், மத வழிபாட்டு முறைகளும் பிடிக்காமல் வெளியேறினார்.
- சென்னையில் தமிழாசிரியர் பணி - பல்வேறு இதழ்களில் இலக்கியப் பணி- 'பொன்னி' இதழில் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞராக அறிமுகம் - திராவிட இயக்கத் தலைவர்கள், தமிழறிஞர்களுடன் தொடர்பு (1947-49).
- தான் கொண்ட கொள்கைக்காக விதவைக் கலப்புத் திருமணம் செய்துகொள்ளத் தாயாரிடம் வேண்டுதல். "ஒரே மகன் என்பதால், அவ்வாறு செய்ய இயலாது" எனத் தாயார் மறுத்தல் (1948).

- 'சாதி மறுப்புத் திருமணம் செய்யவாவது இசைவு கொடுங்கள்' என அன்னையாரிடம் வேண்டுதல். பெற்றோர் மூலம் 'கலைச்செல்வி' எனும் நலத்தகையாரைப் பேராசிரியர் மயிலை சிவமுத்து தலைமையில் சாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்டார் (1949).
- திருமணமான ஆண்டே தமது துணைவியாருடன் இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்றார் (1949).
- கலப்பு மணத்தின் தேவையைப் பற்றிக் கவிதை பல பாடியதோடு இருந்துவிடாமல், தாமும் கலப்புத் திருமணம் செய்துகொண்டு, தம் பிள்ளைகள் அனைவருக்கும் அவ்வாறே செய்துவித்துத் தம் கொள்கைக்கு வெற்றி தேடித் தந்ததன் மூலம் 'அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்னும் வள்ளுவன் வாக்கைத் தோல்வியுறச் செய்தார்.
- காரைக்குடியில் மீ.சு. உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் பணியேற்றார் (1949).
- 'முடியரசன் எனக்குப் பின் கவிஞன்' எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் பாராட்டப் பெற்றார் (1950).
- குருதி உமிழும் கொடுநோய்க்கு இலக்காகி புதுக்கோட்டைத் தமிழ்ப் புரவலர் அண்ணல் பு. அ. சுப்பிரமணியனார் அருட்கொடையால் உயிர் பிழைத்தார் (1955).
- மூன்றாவது மகவான ஆண் மகன் பிறத்தல், செய்நன்றியின் பொருட்டு, தன்னுயிர் காத்த அண்ணல் சுப்பிரமணியனார் நினைவாக அம்மகனுக்குச் "சுப்பிரமணியன்" எனப் பெயரிட்டார் (1955).
- 'சுப்பிரமணியன்' என்ற அம்மகன் மறைவு. கவிஞர் பெருந்துயரம் அடைதல் (1959).
- சென்னை சென்று திரைப்படத்துறையில் ஈடுபட்டார். 'கண்ணாடி மாளிகை' என்ற திரைப்படத்திற்குப் பாடல், உரையாடல் எழுதினார். திரைத்துறையின் சிறுமைகளைக் கண்டு வெறுப்புற்றுத் தம் இயல்புக்கும்.

கொள்கைக்கும், அத்தொழில் சிறிதும் ஒத்து வராத தால் திரைத் துறையிலிருந்து வெளியேறினார் (1961).

- மீண்டும் காரைக்குடியில் தமிழாசிரியர் பணி (1962).
- இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டதாகக் காவல் துறையினர் வழக்கு (1965).
- 'பூங்கொடி' நூலுக்குத் தமிழ்நாடு அரசு தடைசெய்ய ஏற்பாடு (1966), ஆட்சி மாற்றத்தால் 'பூங்கொடி' தடை ஏற்பாடு விலக்கம் (1967).
- தமிழாசிரியப் பணி ஓய்வு (1978).
- மதுரைப் பல்கலைக்கழகம் தமிழியற் புலத்தில் நாடகக் காப்பியப் பணி (1985).
- திராவிட நாடு, முரசொலி, முத்தாரம், குடியரசு, விடுதலை, போர்வாள், முல்லை, எழில், தென்றல், மன்றம், அழகு, முருகு, பொன்னி, குயில், கதிரவன், நம்நாடு, வாரச் செய்தி, பிரசண்ட விகடன், தமிழ்ப் பாவை, காதல், தாமரை, புதுவாழ்வு, தனியரசு, சங்கொலி, வாழ்வு, தோழன், திராவிடமணி, தமிழ்ச்சுவை, தமிழ், போர்முரசு, பாசறை, இன முரசு, இன முழக்கம், நித்திலக் குவியல், செந்தமிழ்ச் செல்வி, கலைக்கதிர், அமுத சுரபி, கழகக் குரல், மறவன் மடல், சமநீதி, உரிமை வேட்கை, தென்னரசு, தென்னகம், தமிழ் முரசு, தமிழ்நாடு, அலை ஓசை, தமிழ்நேசன் (மலேசியா) கவிதை, முல்லைச்சரம், தமிழரசு, குங்குமம், தினமணி கதிர், தினமணி ஆகிய இதழ்களிலும்- மற்றும் பல்வேறு இதழ்களிலும் கவிஞர் தமது எழுத்தோவியங்களைத் தீட்டியுள்ளார்.
- கவிஞரது கவிதைகள் பல சாகித்திய அகாதமியால் இந்தியிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. கன்னடத்திலும், உருசிய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.
- கவிஞரது நூல்கள், பல்கலைக்கழகங்கள் பலவற்றில் பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு பல்கலைக் கழகங்களில் இவர்தம் நூல்கள் 'முனைவர்' மற்றும் 'எம்.ஃபில்' பட்டத்திற்காகவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- 'பாவரசர் முடியரசனாரின் தமிழ்த்தொண்டு' என்ற ஆய்வுநூல் முனைவர் மு. இளங்கோவன் என்பாராலும் 'முடியரசன் படைப்புகள்— ஓர் ஆய்வு' என்ற நூல் முனைவர் சிரீகுமார் என்பாராலும் 'பூங்கொடியும் மணிமேகலையும்' என்ற ஒப்பாய்வு நூல் முனைவர் மு. நிலாமணி என்பாராலும் எழுதப்பட்டு வெளி வந்துள்ளது.

- 'கவியரசர் முடியரசனார் முத்தமிழ் மன்றம்' என்னும் பெயரில் புலவர் தி.மு. அரசு மாணிக்கம் என்பார், ஈரோட்டில் மன்றம் அமைத்துத் தமிழ்த் தொண்டு செய்துவருகிறார்.

## பெற்ற பாராட்டுகள் :

பாவேந்தர் வழித்தோன்றல், புதுமைக் கவிஞர், கவி மா மன்னர், கவிச் சிங்கம், இருபதாம் நூற்றாண்டின் இமயக் கவிஞர், கவிதை இமயம், தமிழ்த்தவம் கொண்ட தலைமைக் கவிஞர், தமிழ்க் குடியரசின் பாட்டு முடியரசர், கவியுலக முடியரசர், சுயமரியாதைக் கவிஞர், தமிழிசைப் பாவலர்.

வள்ளுவர் நெறியில் வாழ்ந்தவர், சொல்லும் செயலும் ஒத்த வாழ்வினர், வறுமையிலும் செம்மை போற்றியவர், திமிர்ந்த ஞானச் செருக்குடைய சங்கப் புலவரனையர், சங்கத் தமிழனைய தூயவர், பீடுநடையினர், பெருமித வாழ்வினர், நிமிர்ந்த நடையினர், நேர் கொண்ட பார்வையர், அண்டிப் பிழையார், ஆர்த்த வாழ்வினர், ஒட்டார் பின் செல்லாதவர், நல்லாசிரியர், ஆசிரியர் போற்றுபவர், நன்றி மறவாதவர், நட்புப் பெரிதென வாழ்ந்தவர், பகுத்தறிவாளர், மனித நேயர், பழகுதற்கினிய பண்பாளர், பிறர்க்குதவும் ஏந்தல், சாதி தொலைத்தவர், சமயம் அறுத்தவர், பதவி வெறுத்தவர், சமத்துவம் விரும்பி, விளம்பரம் விரும்பார், எளிமை வாழ்வினர்,

புகழ்கண்டு கூசுவார். அன்பு நெஞ்சினர், குழந்தை உள்ளத்தினர், பூமனத்தினர், இனிமைப் பேச்சினர், இளமை விரும்பி, அமைதி விரும்பி, குறிக்கோள் வாழ்வினர்.

இடர்ப்பாடுகளும், இன்னல்களும் வந்தபோதும் கொண்ட கொள்கையிலிருந்து இறுதிவரை வழுவாமல் தடம்புரளாத் தங்கமாக— தன்மானச் சிங்கமாக, தமிழ் வேழமாக— கொள்கைக் குன்றமாக வாழ்ந்தவர், பணம், பதவி, பட்டம், பகட்டுக்குப் பணியாமலும், அரசவைப் பதவிகள் நாடி வந்தபோதும் அவைகளைப் புறக்கணித்தும் 'வளையா முடியரசர்' என்றும் 'வணங்கா முடியரசர்' என்றும் புகழ்பெற்றவர், தன்மானக் கொள்கையால், பல மைய மாநில அரசின் அரிய விருதுகளை இழந்தவர். பல்லாயிரம் இளைஞர்களைத் தமிழ் உணர்வாளர் களாக்கியவர், கனவிலும் கவிதை பாடுபவர். பாட்டுலகில் பாரதியாரைப் பாட்டனாகவும், பாரதிதாசனைத் தந்தை யாகவும் கருதிக் "குலமுறை கிளத்தும்" கொள்கை யுடையவர். 'தன்னை மறந்த லயம் தன்னில்' இருக்கும் இயல்பினார்; புட்டிகளின் துணையால் அன்று; எட்டியவரை சிந்திக்கும் இயல்பினால்.

## தமது வாழ்நாளில் இறுதியாக அவர் இயற்றிய கவிதை :

'வாளால் பிளப்பினும் வாழ்நாள் இழப்பினும் வஞ்சமனக்
கேளார் குழுமிக் கெடுதிகள் சூழினும் பூமியில்வாழ்
நாளெலாம் வாட்டும் நலிவே உறினும் நற்றமிழே
ஆளாதல் திண்ணம் அடியேன் நினது மலரடிக்கே.'

தொகுப்பு:
~~கவியரசர் முடியரசனார் முத்தமிழ் மன்றம்~~
ஈரோடு

# நன்றியுரை

நூல் வடிவில் வெளிவராமல் இருந்த என் தந்தையார் கவியரசர் முடியரசனார் அவர்களின் கவிதைகளைப் பல தொகுதிகளாகப் பிரித்து, நானே பதிப்பித்து வெளியிட எண்ணியிருந்தேன். இந்நூலிற்காக, 'நெஞ்சிற் பூத்தவை' என்னும் தலைப்பையும், 'முன்னுரை'யையும், 1990 ஆம் ஆண்டே கவிஞரிடமிருந்து பெற்றும், பல சூழல்களாலும், கவிஞர் 1990 ஆம் ஆண்டிலிருந்தே உடல் நலம் குன்றி நலிவுற்றிருந்ததாலும், நூல் பற்றியதான மேலும் அறிவுரைகளைக் கவிஞரிடமிருந்து என்னால் பெற இயலாமல், நூல் வெளிவர நீண்ட காலமாகி விட்டது.

இந்நிலையில், எந்தையும் எங்களை விட்டு உடலால் மறைந்து விட்டார். ஆனால் அவரது 'நெஞ்சிற் பூத்தவை' யான அவரது கவிதைகள், என்றும் மணம் பரப்பிக்கொண்டு இருக்கும். அந்த மணத்தை நுகரத் தமிழ் மக்களிடம் எடுத்து வரும் 'பூங்கொடி பதிப்பகத்' தார்க்கு என் நெஞ்சிற் பூக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் உருவாக மூலகாரணமாக இருந்த பேராசிரியர் இரா. இளவரசு அய்யா அவர்கள் எமது இதயமார்ந்த நன்றிக்கு உரியவராவார்.

19, 3ஆம் வீதி,
காந்திபுரம்,
காரைக்குடி— 630 001.

அன்பன்.
மு. பாரி

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | தமிழ் வாழ்த்து | 1 |
| 2. | வாளென் செயும்? | 2 |
| 3. | தமிழே வா | 3 |
| 4. | என்னுயிர்க் காதலி | 5 |
| 5. | பைந்தமிழ்க் காதலி | 7 |
| 6. | கருத்திற் கலந்த கழகம் | 8 |
| 7. | எனது வாழ்க்கை | 9 |
| 8. | எனது வாழ்வில் | 10 |
| 9. | சின்னந் தவிர்ந்தேன் | 13 |
| 10. | நாத்திகனா? ஆத்திகனா? | 15 |
| 11. | பாரதிதாசன் என் அரசன் | 17 |
| 12. | நினைந்து மகிழ்கின்றேன் | 19 |
| 13. | தலை நண்பன் | 21 |
| 14. | என்னெதிர் நில்லேல் | 23 |
| 15. | புகழ்ச்சியின் பயன் | 24 |
| 16. | அன்றும் இன்றும் | 26 |
| 17. | புறமும் அகமும் | 28 |
| 18. | நகைதரு செயல் | 30 |
| 19. | வாழ்க தமிழரசு | 31 |
| 20. | தன்னம்பிக்கை | 33 |
| 21. | சேரிடம் அறிந்து சேர் | 35 |
| 22. | புகையும் மனத்தன் | 36 |
| 23. | புகைப் புராணம் | 38 |
| 24. | களிதரும் சுரும்பு | 40 |
| 25. | கல் சொன்ன கதை | 41 |
| 26. | கடலின் பெயர்கள் | 44 |
| 27. | மலையிற் பிறந்த மகள் | 46 |
| 28. | வான் மழையே வா | 50 |
| 29. | உயிர்ப் பொம்மை | 52 |
| 30. | நெஞ்சிற் புகுந்த வேல் | 54 |

| | | |
|---|---|---|
| 31. | ஆசையெனும் ஆழ்கடலில் | 56 |
| 32. | எத்தனைப் பாடல்கள் | 57 |
| 33. | வாழ்க்கைப் போராட்டம் | 58 |
| 34. | காலம் வரும் நேரம் வரும் | 62 |
| 35. | அவள்தான் பாடவைத்தாள் | 65 |
| 36. | புதிய உலகம் | 66 |
| 37. | பனி பொழியும் நிலவில் | 68 |
| 38. | அவர் வரவில்லை | 70 |
| 39. | இசை மாறிய வீணை | 71 |
| 40. | காதலர் சொல்லாமல் | 72 |
| 41. | பருவப் பேச்சு | 74 |
| 42. | காவிய மேடையில் | 76 |
| 43. | உவமையறியாக் கவிதை | 77 |
| 44. | அதுவா? இதுவா? | 79 |
| 45. | இரண்டு குழந்தை | 81 |
| 46. | பள்ளிக்கு அழைத்தவள் | 82 |

~~'கண்ணாடி மாளிகை' திரைப்படப் பாடல்கள்~~

| | | |
|---|---|---|
| 47. | சிரித்த முகம் | 84 |
| 48. | சீரழிந்து போகாதே | 86 |
| 49. | பொய்மைகள் மாயும் | 88 |
| 50. | மையல் தீர | 89 |
| 51. | முகக் கண்ணாடி | 90 |
| 52. | பேதமேது? | 91 |
| 53. | சிரிப்பதேனடி? | 92 |
| 54. | உதவுவையே . . | 93 |
| 54. | நல்குன் அருள்... | 93 |

# தமிழ் வாழ்த்து

தனிமையில் உழலு கின்றேன்
　　தளர்ச்சியும் உடலிற் கொண்டேன்;
எனினுமுன் நினைவால் நெஞ்சில்
　　எழுச்சிமீக் கூர்தல் கண்டேன்.
கனிவுடன் அம்மா என்றன்
　　கற்பனைத் தேன்நி றைந்த
தனிமலர் தூவி நின்றன்
　　தாள்மலர் வாழ்த்து கின்றேன்.

இடர்பல சூழ்ந்த போதும்
　　என்னுடல் தளர்ந்த போதும்
மிடியெனைத் தின்ற போதும்
　　விழியொளி குறைந்த போதும்
கடமையில் தவறேன் அம்மா;
　　கனிந்துனைப் பாடிப் பாடி
இடுபணி புரித லன்றி
　　இனியெனக் கென்ன வேலை?

—முடியரசன்

# வாளென் செயும்?

ஆளென் செயும்விடும் அம்பென் செயும்என்
அருகில்வரும்
தேளென் செயும்எறி வேலென் செயும்முனை
தீட்டுமரி
வாளென் செயும்மனத் திண்மையும் அஞ்சா
மனநிலையும்
தோளும் வலிவும் துணையென என்முனம்
தோன்றிடினே!

(1998)

# தமிழே வா!

தமிழே வா செந் தமிழே வா
தவித்திடும் என்முன் தனிநடை காட்டித்
— தமிழே

அமிழ்தோ பாகோ அடைதரு தேனோ
அரும்பிய வாய்மொழி கரும்பின் சாறோ
— தமிழே

காலின் சிலம்பொலி காதினில் இனிக்கக்
கைவளை ஒலியும் கலந்தினி திசைக்க
நாலடி பாலொடு நடந்து நீ வருவாய்
நாலா யிரம்பா நான்தரப் பெறுவாய்
— தமிழே

அணியும் பொருளும் அளவில் கொண்டாய்
ஆயினும் நான்சில அளித்ததும் கண்டாய்
வணிகன் வழங்கிய மேகலை ஆடிட
வருவாய் வருவாய் வந்தெனைக் கூடிடத்
— தமிழே

நீதருங் கலியால் நெகிழ்ந்ததென் நெஞ்சம்
நினையே நினைந்து நினைந்துளம் கெஞ்சும்
பாதருங் காவியப் பாவையே நீயே
பரிவுடன் கடைக்கண் பார்த்தருள் வாயே
— தமிழே

புறத்தெழில் காணலும் சிலிர்த்ததென் உளமே
அகத்தெழில் காணவும் துடித்ததென் மனமே
புறப்படும் இன்பம் தொகைதொகை யாகப்
புதுச்சுவை காண்பேன் துயரங்கள் ஏகத்
— தமிழே.

(கலி—துயரம், கலித் தொகை.)

# என்னுயிர்க் காதலி

மதுமலர்க் குழலி! மயங்கினேன் நின்பால்
எதுகை மோனை எளிதில் வருமேல்
அதனைத் தொடுவேன் அணியென இடுவேன்;
திருந்திய அணிகளை வருந்திப் பெற்றுப்
பொருந்தப் பூட்டிப் புகழ்ந்தது மில்லை;
பூத்துக் குலுங்குமுன் புதுமுகங் காணக்
காலமும் பொழுதுங் கருதிக் கருதிக்
காத்துக் கிடந்து காலங் கழியேன்;
கள்ளைப் பருகிக் களிமயக் குற்றென
உள்ளிற் பொங்கும் உணர்ச்சிப் பெருக்கால்
அள்ளி யள்ளிப் பருகும் அவாவுடன்
நின்னைத் தொடர்ந்தேன் என்னை மறந்தேன்;
உணர்வுடன் கலந்து புணர்குவை யாயின்
தணலும் எனக்குத் தண்புனல் ஆகும்,
உலகம் ஒருபொருட் டில்லை; உண்மை;
விலகிட நினைவையேல் விடுவேன் உயிரை;
கட்டிய மனையாள் கலங்குவள் என்றோ
எட்டி நின்றனை? இல்லை யில்லை
அட்டி யில்லை அவளும் இசைந்தனள்;
கவிதை மணிப்பெயர்க் காதலி! என்னைத்

தவித்திட விடுதல் தகுமோ இனியும்?
இரவில் நிலவில் இனியநல் லுறவுடன்
உரியாள் என்பால் உசாவும்பொழுதும்
கண்முன் நின்று களிநடம் புரிகுவை;
கண்ணயர் பொழுதுங் கனவிடை வந்து
பண்ணுயர் தமிழாற் பாடி எழுப்புவை
துயிலை மறந்து தோகை நின்னுடன்
மயலுறப் பேசி மகிழ்ந்தநல் லிரவுகள்
நினைதொறும் நினைதொறும் இன்பம் நிகழ்த்தும்;
அனைய இன்பம் அட, ஓ பெரிதே!
ஆடல் பாடல் அரங்கிலும் என்னுடன்
கூட வந்து குலவித் திகழ்ந்தனை;
ஊடல் சிலகால் உற்றனை யாகிலும்
தேடி வந்து பாடி மகிழ்ந்தனை;
உயிரில் உணர்வில் பேச்சில் மூச்சில்
அயரா தென்னுடன் ஆடிக் களித்தனை;
பிரியா தென்னைப் பேணிய காதலி!
உரியாய் நின்னை வேண்டுவல் ஒன்று;
நரம்பிற் குருதி நடமிடும் வரையிலும்
திறம்பா தென்னுடன் திகழுதி நீயே!

# பைந்தமிழ்க் காதலி

வாடல் தவிர்த்து வாழ்வு நல்கும்
பாடல் என்னும் பைந்தமிழ்க் காதலி!
நின்பாற் கலந்துளம் நெகிழுங் காலை
என்மனம் பிறிதொன் றெண்ணுவ தில்லை;
முற்படு பொருள்கள் கட்புல னாகா;
செப்பிடும் எவர்சொலும் செவிப்புலம் நுழையா;
தண்புன லாடுவேன், தையால் வருகுவை;
கண்படை கொள்வேன் கனவிடைத் தழுவுவை;
உண்ணும் பொழுதும் உவந்துடன் அமர்குவை;
இனித்தஎன் துணையொடு தனித்துரை யாடினும்
கனிச்சுவை இதழ்தரக் கனிந்துவந் தணைகுவை!
அனிச்ச மலரடி அணங்கே நின்னால்
உறங்கலும், உண்ணலும் மறந்துளன் பலகால்
இரங்கும் உளத்தினை இனியை எனினும்
பாட்டுல காளும் பைந்தமி ழரசி
ஆட்டிப் படைப்பைநீ ஆடுவன் யானே.

(11—2—1185)

## கருத்திற் கலந்த கழகம்

தாயே போற்றி, தமிழே போற்றி;
நீயே உயிரென நினைவேன் போற்றி!
ஈன்ற உன்னை இனிதிற் காக்க
மூன்று கழகம் முந்தையர் கண்டனர்;
வழிவழி வந்தோர் வாழ்வுனக் களிக்க
எழிலுறு கழகம் இற்றையர் கண்டனர்;
வளமுற நின்னலம் வளர்த்து வருதலாற்
கழக வுணர்வுகள் கருத்திற் கலந்தன;
வருத்துமென் வாழ்வு வளமுறற் பொருட்டோ
கருத்திற் கலந்தன கழக வுணர்வுகள்?
வயிற்றைக் கழுவும் வழியெனக் கருதிலேன்
எயிற்றைக் காட்டும் இழிகுணம் எனக்கிலை;
பழியுனக் குறுமேல் பாய்ந்ததைத் தடுக்கக்
கழகம் ஒன்றே களமெனக் கண்டேன்!
உன்னால் அன்றோ கழக வுணர்வுகள்
என்னுட் புகுந்தன இறுகப் பற்றின;
கழகப் பாவலன் யானுனைக் காப்பேன்
உளமுறும் உணர்வே வாழிய தமிழே!

(27—4—1980)

# எனது வாழ்க்கை

எனது வாழ்க்கை எழில்மலர்ச் சோலை
மனத்தில் இப்படி மற்றவர்க் கெண்ணம்;
வண்ணமும் மணமும் வாரி இறைக்கும்
எண்ணில் மலர்கள் நண்ணுபூங் காவென
இலங்கிட வேண்டும் என்பதென் ஆவல்;
கலங்கிய மனத்தின் கற்பனைக் கனவிது;
நீரே யறியா நிலமென் வாழ்க்கை
யாரே அறிவார்? ஆகினும் உண்மை!
காய்ந்தஅந் நிலத்திற் கண்கவர் சிலசெடி
வாய்ந்ததும் உண்டு; வண்ணமும் மணமும்
தோய்ந்த மலர்கள் துளிர்த்ததும் உண்டு;
நெருங்கிப் பழகியோர் நெஞ்சிற் பழுத்த
பரிவும் அன்பும் உரிமையும் உடையோர்
ஊற்றிய புனலால் தோற்றிய மலரவை;
ஆற்றிய உதவியை ஆருயிர் உளவரை
போற்றிப் போற்றிப் புகழ்தல் அன்றி
ஏற்ற கைம்மாறு யானறி யேனே!

(11—6—1980)

# எனது வாழ்வில்

உற்றவள் ஒவ்வோர் நாளில்
    உலையிட அரிசி யில்லாச்
*சொற்றனை என்பாற் சொல்லத்
    துவண்டுளஞ் சோர்ந்து செல்வேன்;
பற்றுளங் கொண்ட நண்பர்
    பரிந்துகை கொடுப்பர்; ஆனால்
உற்றெனை ஏழை யென்றால்
    உளத்தினுள் அதனை யேலேன்! (1)

உடுத்திடும் உடைக்குக் கூட
    ஒரோவழித் தவித்த துண்டு
துடித்திடும் அற்றை நாளில்
    துணிபல தந்து துன்பம்
துடைத்துநல் லன்பு காட்டித்
    தோழர்கை கொடுத்து நிற்பர்;
நடப்பிது வெனினும் ஏழை
    என்றெனை நவில மாட்டேன்! (2)

* சொற்றனை—சொல்தனை

பிணியெனைப் பற்ற நெஞ்சம்
பேதலித் துழலுங் காலை
தணியவே வந்து தாய்போல்
தண்ணருள் சுரந்து காக்கும்
*அண்ணலார் உதவ மெய்யில்!
ஆருயிர் தங்கு மேனும்
எண்ணவுஞ் செய்யா துள்ளம்
ஏழையாம் இழிந்த சொல்லை (3)

மக்களின் கல்விக் காக
மனம்மிக மாழ்கும் போது
தக்கவர் அன்போ டந்த
மயக்கினைத் தவிர்ப்ப துண்டு;
சிக்கனம் அறியா என்றன்
சிந்தனை கலங்கு மேனும்
பொக்கையாய் ஏழை யென்று
புகலுதல் அறவே செய்யேன்! (4)

வாழ்வினில் துயர வெள்ளம்
அலைத்திட வந்து பன்னாள்
சூழ்வதும் உண்டு; பண்பர்
தூயநற் றொண்டர் அன்பர்

** அண்ணலார் —புதுக்கோட்டை திருக்குறள் கழகத் தலைவர் பு. அ. சுப்பிரமணியனார்

தாழ்விலா அளியர் என்னைத்
    தாங்கிடத் தாமே வந்து
சூழ்பவர் உண்டென் றாலும்
    சொல்லிடேன் ஏழைச் சொல்லை! (5)

பணவரு வாயிற் பற்றாக்
    குறையெனைப் பற்றும் போது
துணையென நட்டார் வற்றா
    அருளுடன் தோள்கொ டுப்பர்;
தணலென *நிரப்பு வந்து
    தனியெனைத் தகைத்துத் தாக்க
அணுகினும் ஏழை யென்றால்
    அரசன்யான் ஏற்ப தில்லை! (6)

(22—3—1984)

* நிரப்பு - வறுமை

# சின்னந் தவிர்ந்தேன்

நீறினை அணிந்து பார்த்தேன்;
நெற்றியில் திருமண் ணிட்டோர்
வேறெனப் பகைத்து நின்றேன்;
விடுத்தபின் திருமண் வைத்தேன்.
நீறணிந் தோரை யெல்லாம்
நெடும்பகை யாகக் கொண்டேன்;
*மாறிடும் இவற்றை இந்து
மதமென ஏற்றுக் கொண்டேன்.

சிலுவையைத் தோளில் இட்டோர்
சீறிடும் பகைவ ரானார்;
குலவிய குல்லா வைத்தோர்
கொடும்பகை யாகப் போனார்;
நிலவிய நீறும் மண்ணும்
நெற்றியில் அணிதல் விட்டேன்
உலகினில் நல்ல சின்னம்
ஒன்றைநான் தேடி நின்றேன்.

(*மாறிடும்—மாறுபாடுடைய)

சிலுவையைச் சுமந்து பார்த்தேன்;
சின்னம்வே றணிந்தோ ரெல்லாம்
உலகில்அஞ் ஞானி என்றே
உளத்தினிற் கருதிக் கொண்டேன்!
தலைதனிற் குல்லா வைத்தேன்
மற்றது தரியா ரெல்லாம்
நிலவிய சைத்தான் என்றே
நெஞ்சினிற் பகைத்து நின்றேன்.

இனியநன் மக்கட் பண்பை
இளகிய அன்பை நீக்கி
மனிதரைப் பகைக்கச் செய்யும்
மதம்படு சின்னம் விட்டேன்;
கனிவுறும் அன்பும் பண்பும்
கசடறு நெஞ்சம் வாய்க்கும்
தனியொரு வழியைக் கண்டு
தளர்விலா தொழுகு கின்றேன்.

(வேறு)

மனத்தினுள் மாசுற மறைபல ஓதி
கணத்தினில் ஆத்திகன் ஆவதை விடுத்து
நல்லவ னாகி நாத்திகன் என்றொரு
சொல்லினைப் பெற யான் குளுரைத்
துளனே!

(1—6—1981)

# நாத்திகனா? ஆத்திகனா?

அன்பும் தூயநற் பண்பும் நிறைந்து
மன்பதை ஓம்பும் மாபெரும் நோன்பினைப்
பற்றிய நெஞ்சிற் பழுது படாவணம்
முற்றிய உறுதியில் நிற்றலை விழைவேன்;
வஞ்சகம் பொறாமை நெஞ்சறி பொய்ம்மை
நஞ்சென வெறுத்து நடக்கும் இயல்பினேன்;
மற்றவர்க் குறுகண் மனத்திலும் நினையேன்;
செற்றமுங் கலாமும் செய்திட விழையேன்;
பகுத்துணர் அறிவிற் பற்றுதல் உடையேன்;
நகத்தகும் மடமைகள் செகுத்திடும் படையேன்;
மதம்எது வாகினும் மனத்தினிற் கொள்ளேன்;
அதனதன் சின்னமும் அணிதலும் செய்யேன்;
கோவிலுங் குளமுங் குறுகுதல் செய்யேன்;
மேவிய பூசனை யாவையும் வேண்டேன்;
ஆதலின் நாத்திகன் என்றெனை அனைவரும்
ஓதுதல் கேட்டேன்; உளத்தினில் நகைத்தேன்;
அன்பையும் பண்பையும் அறவே மறந்தும்
மன்பதை கெடுத்தும் தன்னலம் மிகுத்தும்
பழுதுகள் மனத்திற் படர விடுத்தும்

தொழுதுபின் சென்று துதிபல பாடி
வஞ்சக நெஞ்சினில் வாய்மை துறந்தும்
அஞ்சுத லின்றி அரும்பழி இழைத்தும்
செற்றமுங் கலாமுஞ் செய்தலே தொழிலாய்
மற்றவர் பொருளை மறைவினிற் கவர்ந்தும்
பகுத்தறி வின்றிப் பாழ்படும் பழைமையுள்
நகத்தகும் மடமையுள் நாடொறும் மூழ்கி
மதமுங் கடவுளும் வாயாற் கூறி
அதனடை யாளச் சின்னம் அணிந்தும்
எண்ணிய படியெலாம் இறைவன் பெயர்சொலிப்
புண்ணியத் தலங்கள் பூசனை தீர்த்தம்
என்றெலாம் கதைத்தும் எத்தித் திரியின்
நன்றென் மக்கள் நயப்புடன் போற்றி
ஆத்திகன் என்றே அழைத்திடல் கேட்டேன்;
கூத்திது கண்டு குலுங்கச் சிரித்தேன்;

(21—12—1978)

# பாரதிதாசன் என் அரசன்

கவியரங்கே அரண்மனையாய், மக்கள் நெஞ்சே
காவலன்றன் அரியணையாய்த் துணிவஞ் சாமை
இவையிரண்டும் மெய்காப்பாய்ப் பெருமி தத்தோ
டெழுபுலமை நல்லமைச்சாய் எழுது கோலே
நவைதவிர்ந்த செங்கோலாய்ச் சங்க நூல்கள்
நலஞ்செய்யும் வெண்குடையாய் விளங்க வேந்தன்
கவியுலகே அவன்ஆட்சி செய்யும் நாடு
காப்பளிக்கும் இலக்கணந்தான் எல்லைக் கோடு!

அடையார்தம் நெஞ்சத்தை நடுங்க வைக்கும்
அரிமாவின் தோற்றத்தன்; வகுத்த சாதிப்
படையாவும் துடிதுடித்துப் புறமிட் டோடப்
பகுத்தறிவுப் படைக்கலங்கள் செலுத்தும் வீரன்;
தடையாகும் மதயானை அடக்குந் தோட்டி
தாங்கிவரும் உரனுடையன்; பாண்டி வேந்தன்;
அடடா, ஓ! அவ்வரசன் போர்தொ டுத்தால்
அவனெதிரில் நிற்பதற்கோர் ஆளே இல்லை!

பெரியாரைத் துணைகொண்டு செங்கோ லோச்சும்
பெருவேந்தன் பாவேந்தன் தனது நாட்டில்
சரியான சமநீதி வழங்குஞ் சட்டம்
தன்னிகர்த்த திருக்குறள்தான்; அரசு மன்றில்

புரியாத எம்மொழிக்கும் ஆட்சி யில்லை;
புதுமைமிகும் தமிழொலிதான் எங்கும் கேட்கும்;
எரியாது மாந்தருளம் குளிர்ந்தி ருக்கும்;
எழில்கொஞ்சும் இன்பமெலாம் பொங்கி நிற்கும்!

வண்டினங்கள் இசையமுது பொழிந்து சூழும்
வளர்முல்லைக் காடிருக்கும்; குறிஞ்சித் திட்டில்
*தண்டகம்போல் தேனருவி முழங்கி நிற்கும்;
தரைமுழுதும் அழகெல்லாஞ் சிரித்தி ருக்கும்;
கண்டுநிகர் தமிழியக்கப் பாவ லர்க்குக்
கைநிறையப் பாண்டியன்நற் பரிச ளிப்பான்;
பெண்டிரினம் குடும்பவிளக் கேற்றி வைத்துப்
பேணிநலம் துய்த்திருப்பர் அந்த நாட்டில்

பாட்டென்ற வில்லெடுப்பான் பகைமு டிக்கப்
பகுத்தறிவு நாணேற்றிச் சொல்தொ டுப்பான்
'காட்டுன்றன் வீரத்தைப் புலியின் போத்தே
காப்பாற்றுன் தாயகத்தை' எனப்ப ணிப்பான்
பாட்டாட்சிப் பாசறையில் பயிற்று வித்துப்
படைமறவர் பற்பலரைத் தோற்று வித்தான்;
ஏட்டாட்சிப் போர்க்களத்தில் என்றன் மன்னன்
எனக்களித்தான் படைத்தலைமை அவன்பேர்
வாழி!

(*தண்டகம்—குறிஞ்சி நிலப்பறை)

(21—3—1978)

('தமிழரசு' — பாவேந்தர் மலருக்காக எழுதப்பட்டது)

# நினைந்து மகிழ்கிறேன்

பெரும்பள்ளி பழம்பள்ளி பேர்பெற்ற ஆசான்மார்
கரும்பள்ளித் தருவதெனக் கற்பார்க்குக் கல்விநலம்
தரும்பள்ளி உயர்பள்ளி தனதுழைப்பால்
மேல்நிலைக்கு
வரும்பள்ளி வளர்பள்ளி மேன்மேலும் வாழியவே!

தமிழியலில் நல்லறிஞன் தமிழண்ணல்
எனும்பெயரான்
அமிழ்தினிய பாமணியன் ஆ. பழநி எனுமன்பன்
துமியளவுங் கடன்பிறழாத் தூயமுத்து சம்பந்தன்
தமைமறந்து தமிழ்சொல்லத் தானுயர்ந்த எம்
பள்ளி!

மீனாட்சி சுந்தரப்பேர் மேவியஎம் பள்ளிதனில்
தானாட்சி செய்துவரும் தாளாளர் தகவென்னே!
நானாட்சி செயக்கல்வி நயமுணர்ந்தார்
அன்பென்னே!
தேனாட்சிக் காலமது! சிந்தித்து மகிழ்கின்றேன்.

வாயிலுக்குட் புகுந்ததுமென் வாழ்வுதனை
மறந்துவிட்டுக்
கோயிலுக்குள் அரசனெனக் கோலோச்சி
நானிருப்பேன்!
தாயினுக்கு நிகராகத் தமிழூட்டி மாணவரைச்
சேயெனவே நான்புரந்த செயலெல்லாம்
நினைக்கின்றேன்.

சொல்லுக்குப் பொருளுரைப்பேன் சொக்கிடுவர்;
கடிந்துரைக்கும்
சொல்லுக்குப் பணிந்திருந்து சுடுசொல்லும்
பொறுத்திருப்பர்
மல்லுக்கு வர நினையா மாணவரைப்
பெற்றிருந்தேன்
இல்லுக்குள் ளிருந்தோய்வில் இவற்றையெலாம்
நினைக்கின்றேன்.

பள்ளிக்குப் பவளவிழா! தேனாறு பாய்ந்ததுபோல்
உள்ளுக்குள் நான்மகிழ்ந்தேன் ஓதியஅம்
மொழிகேட்டு
கள்ளுக்குள் மிதந்துவரும் களிவண்டாய்
நான்மிதந்தேன்
அள்ளூற்ற தமிழமுதால் அகமகிழ்ந்து
வாழ்த்துகிறேன்.

*(மீ.சு. உயர்பள்ளிப் பவளவிழா வாழ்த்து)*

# தலை நண்பன்

நிலைபெறும் நட்புடன் நிற்பைநீ எனவே
தலையில் வைத்துனைத் தாங்கினேன் நண்பா!
இலைநீ என்பால் இன்றெனைப் பிரிந்தனை
நிலையில் இழிந்தாய் நினையா போற்றினேன்?
மருத்துவர் தம்பால் மாதம் ஒருமுறை
திருத்தி நின்னுடல் செழிப்புற வளர்த்தேன்;
*ஆடிமுன் நின்றுனை அழகுறச் செய்திட
நாடிய என்கை நலிந்து சோர்வுறத்
தடவித் தடவித் தந்தநல் ஒப்பனை
**மடவை நீயோ மறந்தனை பிரிந்தனை;
ஒப்பனை செய்தபின் உன்றன் அழகை
எப்படி எப்படி இருவிழி யாலும்
பார்த்துப் பார்த்துக் களித்தேன்! அன்றைய
நேர்த்திஎன் நெஞ்சில் நிலைத்து நின்றதே!
குலையா தொழுங்குடன் கூடித் திகழ்ந்திடப்
பலநாள் முயன்றேன் இலையே நன்றி!
பணிந்தும் வளைந்தும் பழகினை அன்று

* ஆடி — கண்ணாடி

** மடவை — அறிவிலி

***தணந்தாய் இன்று தளர்ந்ததென் மனனே;
பகுத்தறி வில்லாய் படியா திருந்தனை
வகுப்பில் வைத்துனை வளர்த்ததை மறந்தாய்!
கருகரு வெனநீ கண்கவர் வனப்பொடு
வளர்ந்து திகழ்ந்திட வாஞ்சையால் உன்னை
நறுநெய் யூட்டி நாளும் வளர்த்தேன்;
அன்றுநான் தெம்பும் ஆற்றலும் உடைமையால்
ஒன்றிய அன்புடன் ஒட்டி நின்றனை;
இன்றுநான் தளர்ந்தேன் இயல்புநீ மாறினை!
வாழ்விலும் தாழ்விலும் மாறாக் குணத்தொடு
சூழ்வதே நட்பெனச் சொற்றனர் முன்னோர்;
வறுமையில் என்னுடன் வளர்ந்தனை இன்றோ
பழமை மறந்தாய் பண்பினைத் துறந்தாய்
என்முன் நில்லேல் இகழ்ந்துனை வெறுத்தேன்;
மண்ணில் முடிநீ மாய்ந்து மடிநீ
கண்முன் காணா தொழிகநீ கடிதே!

*** தணர்ந்தாய் — பிரிந்தாய்

(தலையின் இழிந்த முடி பற்றிப் பாடியது.)

(23—9—75)

# என்னெதிர் நில்லேல்

முதுமையே நின்னை மோதி மிதித்து
முதுகிடச் செய்குவன் முகங்காட் டாமல்
எவ்வழி யாகினும் ஏகுதி! ஏகுதி!
இவ்வுழை வந்துநீ என்செய இயலும்?
என்தலை தாங்கிய எழில்முடி மேவிய
தன்னிறம் மாற்றுவை; தரையினில் வீழ்த்துவை;
பொன்முகப் பொலிவை மென்மெல அழித்துப்
பன்முகக் கோடுகள் பற்பல தீட்டுவை;
கூரிய விழியின் சீரிய பார்வை
மாறி வழிதடு மாறிடச் செய்குவை;
வீறுகொள் நரம்பின் விறைப்பினைத் தளர்த்தி
மாறுறச் செய்குவை; வேறென் செய்குவை?
கையுங் காலுங் கண்ணுங் காதுமென்
மெய்யும் பிறவும் மேவித் தவழ்ந்து
விளையாட் டயர்ந்திடர் விளைத்திட லன்றி
உளத்தில் படர்ந்துள இளமையின் முறுக்கைத்
தளர்த்திட நின்னால் தகுமோ? நின்னைப்
பிறக்கிடச் செய்குவன் பேதாய் செல்செல்!
உளத்திற் பொங்கும் உணர்ச்சிக் கெதிராய்க்
களத்தில் நிற்பையேல் கவிழ்குவை நீயே!

(1—1—77)

# புகழ்ச்சியின் பயன்

ஆர்வத் துடிப்பால் ஆசைப் பெருக்கால்
பேர்பெற் றொளிரப் பெருகிய நினைப்பால்
ஏதோ எழுதினன் என்பாற் கொணர்ந்தனன்;
தீதோ நன்றோ திறந்துநான் படித்தேன்;
செறிந்த கற்பனை சிற்சில அதனுட்
சிறந்திடல் கண்டேன் சிந்தை மகிழ்ந்தேன்
மகிழ்ந்துளம் நெகிழ்ந்திட வாழ்த்திப் புகழ்ந்தேன்
புகழ்ந்துரை புகல்வது புரையன் றென்பதால்;
பாவலன் நான்சொலும் பாராட் டுரையை
ஆவலிற் பருகினன் அவனிரு செவியால்;
நாவின் மழையில் நனைந்தனன் குளிர்ந்தனன்
பாவின் திறமெலாம் பயின்றிடப் பலப்பல
காவியம் படைத்தனன் கண்டுநான் வியந்தேன்;
என்மொழி அவற்கோர் ஏணி யாயது;
நன்மொழி நலந்தரும் எனநான் உணர்ந்தேன்;
மற்றொரு கவிஞன் வந்தனன் என்பால்
பற்றுடன் அவன்தன் படைப்பினைத் தந்தனன்;
புகழ்மொழி பொழிந்தேன் புதுப்புது நூல்பல
புகலுவன் என்மனம் பூத்ததோர் நினைவால்;

உருக்கிடும் புகழ்ச்சியை உளத்திடை நிறைத்தனன்;
செருக்கினன்; மீசை முறுக்கினன், விரைத்தனன்;
நிமிர்த்தினன் தலையை; நெருக்கினன் விழியை;
உருத்து நோக்கினன் ஒப்பென என்முன்
நிறுத்திட எவரே நிலத்தினில் உள்ளார்?
யானே பெருங்கவி என்றவன் மனத்துள்
தானே சொலிச்சொலித் தருக்கித் திரிந்தனன்;
புதுவன படைக்கும் நினைவதை யிழந்தனன்;
மதுமயக் குற்றென மதிமயக் குற்றனன்;
'இளங்கோ வள்ளுவர் எத்தனை யியற்றினர்?
உளங்கொளும் ஒவ்வொரு நூலால் உயர்ந்தனர்'
என்றவன் நினைந்தே இழிந்தனன் இழிந்தனன்;
நன்றுரை புகன்றேன் நாவாற் புகழ்ந்தேன்.
என்மொழி அவற்கோர் இடுதடை யாயது;
தவறுகள் உண்டாம் தகுவன ஆற்றினும்
அவரவர் பண்பறிந் தாற்றா விடத்தென
ஓதிய மொழிப்பொருள் உணர்ந்தேன் யானே.

(23—12—1975)

# அன்றும் இன்றும்

சிற்றிளம் பருவம் பெற்றஅக் காலை
உற்றநற் களிப்போ ஓரள வில்லை;
இரவும் பகலும் எய்துமம் மகிழ்ச்சி
அறவே எனைவிட் டந்தோ அகன்றது!
விளையாட் டயரும் இளையாச் சிறுவர்
களியாட் டாடிக் கள்ளமில் மனத்தாற்
பழகினர் நெஞ்சம் இளகினர் அடடா!
கழிந்தஅந் நாளைக் கருதுங் காலை
உயிர்ப்பதுங் கண்ணீர் உகுப்பதும் வியப்பிலை;
இரும்பின் உருளை விரும்பி உருட்டி
வரும்போழ் தின்பம் வளரும் வளரும்!
ஓஒ பம்பரம் ஒன்றே போதும்
தாவா இன்பந் தந்தெனை வளர்க்கும்;
இன்றவை எங்கே? சென்றதும் எங்கோ?
இன்றென் தலையே இயங்கிடும் பம்பரம்
ஒன்றிய கயிறோ ஓயாக் கவலைகள்;
இறக்கை யிழந்தேன் இன்ப வானிற்
பறக்க இயலேன் பறக்கினும் வீழ்வேன்;
அன்றெலாம் இன்பம் அழைக்குமுன் வருமே!

நின்று கூவினும் இன்றது காண்கிலேன்;
உதைத்துதைத் தாடும் உருள்பந் தொன்றும்
புதைபொருள் போல மறைந்துள தின்றே!
ஈங்கிவன் நானே எழுபந் தானேன்
ஓங்கி உலகெனை உதைத்துதைத் தாடும்;
கவட்டை வில்லுங் கவணும் மறந்தேன்!
அவற்றை யெல்லாம் அவலம் என்மேல்
திருப்பி விடுக்கும்! துரத்தி யடிக்கும்!
அன்றுயர் வானில் அமைதியும் நீலமும்
நின்றிடல் கண்டேன்; இன்றவை உளவோ?
மண்ணில் வளர்ந்த மரங்களும் அவற்றில்
வண்ணங் காட்டும் வளரிளந் தளிரும்
கண்ணின் விருந்தாய்க் களிப்பினை நல்கும்;
நினைப்பின் அவையெலாம் நிலைத்தவோ இன்று?
மனத்தால் விழைந்தவை அனைத்தும் மாறின!
அவையோ மாறின? அல்ல அல்ல;
தவிரா மாறுதல் சார்ந்ததென் பாலே!
இனியநல் லமைதி எய்துமோ இனிமேல்
தனியல் லின்பந் தளிர்க்குமோ மனத்தே?

(ஊட் (HOOT) என்பவர் இயற்றிய பாடலின் தழுவல்)

# புறமும் அகமும்

நன்றென்றும் தீதென்றும் நன்கு பகுத்துணர
ஒன்றுந் தெரியாமல், உள்ளத்தாற் சிந்திக்கும்
ஆற்றல் இலனாக ஆதிநாள் வாழ்ந்தமகன்
சாற்றும் மொழியொன்றும் தானறியா அந்நாளில்
கண்ணசைத்தும் கையசைத்தும் காட்டுகிற
சைகையினால்
எண்ணமதைச் சொல்லிவந்த எண்ணறியாக்
காலத்தே
காட்டகத்தே காடடர்ந்த கல்லின் குகையகத்தே
கோட்டு விலங்கினமும் கூரெயிற்று மாவினமும்
சூழ்ந்து திரிகின்ற சொல்லரிய சூழலில்தான்
வாழ்ந்திருந்தான்; அந்த வரலாறு நாமறிவோம்.
கொல்லும் விலங்கின் குழுவிடையே வாழ்ந்ததனால்
வெல்லும் வகையறிந்து வேட்டைத் தொழில்புரிந்து
தற்காத்துக் கோடற்கும் தன்பசியைப் போக்கற்கும்
கற்கருவி விற்கருவி கைக்கொண்டான் அம்மாந்தன்;
அந்நாளில் வாழ்வின் அடித்தளமே வீரந்தான்;
முன்னாளில் வாழ்ந்தோன் முதற்பண்பே வீரந்தான்;
வீர விளையாட்டால் வெற்றிக் களியாட்டால்
நேரங் கடந்துவர நீண்டநாள் தாண்டிவிடச்
சிந்தனையில் ஓர்தெளிவு சேர்ந்து தளிர்விட்டு

முந்திவரும் கூட்டுணர்வு மூண்டு வளர்ந்துவரக்
கூடி மகிழ்ந்து குழுவாக வாழ்நெறியை
நாடிக் குமுகாய நாட்டத்தைப் பெற்றிருந்தான்;
ஒட்டி உறவாடி உள்ளங் களித்ததனால்
கட்டுப் படுத்திக் கனிவுதரும் அன்புணர்வு
விட்டுத் தளிர்த்து விளைந்து பெருகியது;
மட்டுப் படுத்தும் வகையறியா அம்மாந்தன்
அன்பின் வலிமைதனை அன்பு தருந்தொடர்பை
நன்கு தெளிந்தான் நாள்கள் வளர்ந்துவரக்
காதலெனும் பாலுணர்வைக் கண்டு மிகமகிழ்ந்தான்
ஆதி மனிதனவன் அன்பின் பயன்கண்டான்;
பேசும் மொழியறிவைப் பெற்று வளர்ந்ததற்பின்
மாசிலா நூல்கள் வகுக்கும் வகையறிந்தான்;
சாதல்தரும் வீரத்தை ஆதல்தரும் காதலினை
ஓதும் புறமென்றும் உள்ளும் அகமென்றும்
கண்டான் கனிதமிழில் விண்டான் உலகதனிற்
கொண்டான் பிறரறிந்து கொள்ளாப்
பெருமைஎலாம்;
அவ்விரண்டு பண்பிற்கும் ஆன இலக்கணமும்
செவ்விதிற் செப்பினான் சேர்த்து.

(5—12—1965)

## நகைதரு செயல்

சிதறிய மையெலாம் திரையிற் படுங்கால்
இதுதான் சித்திரம் எனிலது சரியோ?
உளிபடு பொருளெலாம் உலகில் நிலைபெறும்
ஒளிமிகு சிற்பமென் றோதுதல் முறையோ?
மதிற்சுவர் மட்டும் மாந்தர் வதியும்
புதுக்குடில் என்றால் பூவுல கேற்குமோ?
களியர் போலக் கழறும் மொழியெலாம்
நளிசுவைக் கவியெனல் நகைதரு செயலே!

# வாழ்க தமிழரசு

கற்றறி புலவர் நாவில்
        களிநடம் புரியும் பாட்டால்
நற்றமிழ் மணக்கும் பூங்கா;
        நயமிகு போட்டி யிட்டு
வெற்றியில் மிளிரும் நல்ல
        *வெண்டளை மலருங் காடு;
தற்கிணை தானே யான
        தமிழர சென்னும் ஏடு!

வயல்களிற் புரட்சி செய்து
        வளமைகள் சேர்க்க வேண்டிச்
செயல்முறை யனைத்துங் காட்டிச்
        சீர்செயும் உழவர் தோழன்;
பயனுறு தொழில்கள் ஓங்கப்
        பயிற்றிடும் பள்ளி யாசான்;
அயலவர் கண்டு சொன்ன
        அறிவியற் கலைசேர் கோவில்!

* வெண்டளை — வெண்பா

பழந்தமிழ்ப் பண்பா டெல்லாம்
பாரினில் மீண்டுந் தோன்ற
உழந்துழந் தோடித் தேடி
ஒவ்வொன்றுங் கண்டு வந்து
வழங்கிடும் வள்ளல்; வல்லார்
வரைந்திடும் ஓவி யங்கள்
தழைந்திடும் ஓவக் கூடம்
தமிழர சென்னும் ஏடு!

நெஞ்சினில் தமிழை வைத்தார்
நெடுந்தொலை நாடு சென்று
விஞ்சையின் மேன்மை கண்டு
விளக்கிடும் பயண நூலாம்;
எஞ்சலில் திறமை கொண்டார்
எழுதிடுங் கதையின் பேழை;
செஞ்சொலைச் சிதைக்கா வண்ணம்
செந்தமிழ் எழுதும் ஏடு!

கலைகளில் தோய்ந்த உள்ளம்
காத்தலால் இந்த ஏடு
பலவகைச் சிறப்பும் மேவிப்
பயன்தரக் காணு கின்றோம்;
உலகினில் அரசின் சார்பில்
உலவிடும் இதழ்கட் கெல்லாம்
தலையென உலகம் போற்றத்
தமிழர சென்றும் வாழ்க!

('தமிழரசு' ஐந்தாம் ஆண்டு மலருக்கு 3—6—1974)

# தன்னம்பிக்கை

படகொடு கடலிற் செல்வோன்
　　பாய்ந்திடும் அலைகள் கண்டு
நடுவினிற் கவிழும் என்று
　　நடுங்குவ தில்லை; வான
இடைவெளி பறக்கும் மாந்தன்
　　இடர்வரு மோவென் றெண்ணிக்
கடுகள வேனும் அச்சம்
　　கருத்தினிற் கொள்வ தில்லை.

சரிவுகள் கண்டு மாந்தன்
　　சலிப்புளங் கொள்ளு மாகில்
பரிவுடன் சுரங்கம் புக்குப்
　　பசும்பொனைத் தருவ தேது?
திரிதரும் சுறவும் வீசும்
　　திரைகளும் கடலிற் கண்டு
வெருவுறு மாகில் முத்து
　　வெளிப்படல் காண்ப தேது?

எரிசுடர் வான வீதி
　　இடர்களை அஞ்சி நின்றால்
அறிவியல் மாந்தன் திங்கள்
　　அதனிடை நடப்ப தெங்கே?

சிறைதுயர் தூக்கு மேடை
செக்கடித் தொல்லை கண்டு
வெருவுது மாகில் நாடு
விடுதலை பெறுவ தெங்கே?

வாழ்விலும் அலைகள் உண்டு;
வருமிடர் பலவும் உண்டு;
வீழ்வுறும் சரிவும் உண்டு;
விழுங்கிடும் சுறவும் உண்டு;
பாழ்படும் இவற்றைக் கண்டு
பதறிடா தெதிர்த்து நின்று
தாழ்வுறாத் துணிவை நம்பித்
தலைப்படின் இன்பங் காண்பாய்.

தனதுளத் துணிவை நம்பித்
தாழ்விலா முயற்சி கொண்டான்
வினையிடை ஊழைக் கூட
வென்றிட வல்லான் என்று
மனவளப் புலவன் சொன்னான்;
மற்றிதை மறுப்பா ரில்லை;
உனையினி நம்பு; வாழ்வில்
உயர்வது திண்ண மிங்கே!

(30—1—1980)

# சேரிடம் அறிந்து சேர்

நளிமலர்க் காவுள் வளிவரு மாகின்
குளிர்வுறும் மணம்பெறும் நலமும் கொடுக்கும்;
சுடுநிலந் தழீஇ அதுவரு மாகின்
கொடு*வளி யாகித் துயர்தான் கொடுக்கும்;
தேனொடு கலந்தால் ஆன்பால் சுவைமிகும்;
நீரொடு கலக்குமேல் சீரது குறையும்;
இருசுழிக் கொம்புடன் வருகுறிற் ககரம்
பெருகிய ஒலியுடன் நெடிலெனப் பெயர்பெறும்;
ஒருசுழிக் கொம்புடன் காவெனும் நெடிலுறின்
குறைவுறு மொலியுடன் குறிலெனப் பெயர்பெறும்;
நல்லவர்ச் சார்வோர் நல்லோ ராகுப
அல்லவர்ச் சார்வோர் அல்லரா குபவே;
சேரிடன் அறிந்து சேர்க இன்றேல்
சீரழி வாகிச் சிறுமை மிகுமே!

* வளி — காற்று

(29—4—1980)

# புகையும் மனத்தன்

அகவை* எனக்கோர் இருபத் தைந்தில்
பகரும் விருப்பால் பழகினேன் நின்பால்;
மணிவிழாக் கடந்தது மற்றதன் பின்னும்
பிணிவிடா** திருந்து பேணினேன் நின்னை;
அல்லும் பகலும் அகலா திருந்து
புல்லிப் பயின்று பொழுதெலாம் போற்றினேன்;
தீயன் என்றுனைச் செப்பின ராகினும்
நீயென் தோழன் எனநான் நினைந்தேன்;
துணைவி நல்லாள்நின் தொடர்பை விடுகெனப்
பணிவுடன் பலநாள் பகர்ந்தனள் எனினும்
பிரிந்தே னல்லேன் பித்துடன் நின்னொடு
திரிந்தேன் மகிழ்ந்தேன் தெரிகுவை அனைத்தும்!
கவலைகள் என்னைக் கவ்வும் பொழுதெலாம்
உவகை*** பெறுவான் உன்னை நயந்து
கற்பனைக் காவுள் கைத்தலம் பற்றிப்
பொற்புடன் உலவுவேன் புதுப்புதுக் கவிதைகள்
எத்தனை எத்தனை இயம்பினை! இனியாய்!
நலம்பல நல்குவை யாகினும் நண்பா
பொலிந்த தோற்றமும் புகைந்த மனமும்

---

*வயது, **தொடுப்பு, ***பெறும்பொருட்டு,

அடைந்துளை யாதலின் அறியா வண்ணம்
தொடர்ந்து பற்பல தொல்லைகள் தந்தனை
நட்பிடைக் குய்யம்**** நயந்தனை; நீதான்
கொன்றன்ன இன்னா செயினும் நீசெய்
ஒன்று நன் றுள்ளினேன் ஆதலின் உன்னை
விட்டு விலகேன் வெண்புகைச் சுருட்டே!

****வஞ்சனை

(21—10—1984)

# புகைப் புராணம்

வெண்புகைச் சுருட்டை விரலிடைப் பற்றி
ஒண்முகஞ் சுருங்க உறிஞ்சிடும் காளையர்
வாயுட் புகுந்து மூக்கின் வழிவரும்
மாயச் செயல்செயும் மந்திர வாதிநான்;
நெருப்புள இடத்தைப் பொறுப்புடன் உணர்த்தி
முறைக்கடன் ஆற்றும் முன்னறி விப்பு;
அரிவையர் தமக்கே அழுதுகண் ணீர்விடல்
உரிமைச் சொத்தாம் உலகினர் உரைப்பர்;
போர்முகங் கண்ட தார்முக வீரரும்
நேர்முகங் காட்டி நின்றிடின் என்முன்
கண்களைக் கசக்கிக் கலங்கிடச் செய்யும்
எண்ணரும் வீரம் என்பா லுண்டு!
பத்தியால் அடியவர் படத்தின்முன் கொளுத்திய
பத்தியில் வளைந்தும் நெளிந்தும் படருமென்
அத்தனை அழகும் அரிவையர் கண்டுதான்
தத்திட தாகிட தாமென நடனம்
முத்திரை வைத்தவர் முயன்று பயின்றனர்;
அடுப்படி அறையில் ஆட்சி புரிவேன்
தடுத்திடும் சுவர்களின் தளதள முகத்தில்
வடுப்படக் கரியை வாரிப் பூசுவேன்;

மடைப்பளி மேற்புறம் மன்னவன் எனக்குத்
தனிவழி அமைப்பர் தலைநிமிர்ந் தேகுவேன்
எனைவழி மறித்திட எவரால் இயலும்?
குடில்களில் வேய்ந்த கூரைகள் ஓடுகள்
தடைசெயின் அவற்றிடைத் தப்பிப் புகுந்து
வெளிவரு வேன்எனை விஞ்சியோர் எவருளர்?
என்றும் சான்றோர் எண்ணம் போல
நின்றுமேல் நோக்கி நிமிர்ந்தெழும் இயல்பினேன்:
தடுத்துப் பிடித்துத் தடைசெயச் சிறைசெய
எடுத்திடும் முயற்சிகள் என்னிடம் தோற்கும்;
புகுதற் கியலாப் புல்லிய இடத்தும்
புகலால் என்பெயர் புகைஎனப் புகல்வர்!
நல்லியல் மாதர் *நடுவினை நிகர்த்திடும்
மெல்லிய உருவில் மேவுவேன் எனினும்
பல்வகை ஆலையில் பருத்துள குழாயில்
விக்கிர மாதித்தன் வேதா ளம்போல்
உக்கிர மான உருவொடு வருவேன்;
மணம்படு பொருளிலும் மயங்கிநான் எழுவேன்;
பிணம்சுடு காட்டிலும் பெருலா வருவேன்;
ஆண்டியின் கையிலும் அடங்கி யிருப்பேன்;
ஆண்டவன் முன்னரும் அடைக்கலம் புகுவேன்;
சிறுகுடில் ஆகினும் வளமனை யாகினும்
சிறியவன் எனக்குச் சிறப்பிடம் உண்டு;
நெருப்பின்றிப் புகையா நிலையினை உணர்வீர்
சிறப்புறும் என்புகழ் செப்பினேன் உமக்கே!

(*நடு—இடை)

(24—10—1984)

# களிதரு சுரும்பு

(நிலை மண்டில ஆசிரியப்பா)

மணம்விரி மலருள் நறவம் மாந்தித்
துணையுடன் திரிதரு சுரும்பே! நின்றன்
மென்சிற கொலியால் எழுப்பிடும் மெல்லிசை
நன்னர் யாழின் நரம்பினை வருடப்
படர்தரும் இசையின் பான்மைய தாகித்
தடஞ்செவி பாய்ந்துளம் தழைத்திடச் செய்தது;
புள்ளிகள் மேவிய பொன்னிறச் சிறகர்
அள்ளி யிழைத்திடும் அழகின் வண்ணம்
கண்ணுக் கினியதோர் காட்சியாய்த் திகழ்ந்தது;
கண்ணுங் கருத்துங் களிகொளச் செய்யும்
பண்ணும் எழிலும் படைத்தனை! வாழிய!
நின்செயல் என்னை நெகிழச்செய் ததுவே!

# கல் சொன்ன கதை

தரையினில் மலையாய் நிற்பேன்
　　*தளிதனில் சிலையாய் நிற்பேன்
பொறைமிகு தூணும் ஆவேன்
　　பொடிபடும் கல்லும் ஆவேன்
அரைபடும் அம்மி யாவேன்
　　ஆடிடுங் குளவி யாவேன்
நெறியினை ஒழுங்கு செய்ய
　　நிரப்பிடுஞ் சரளை ஆவேன்!

விலையிலா மணிக ளாவேன்
　　வெறும்பரற் கல்லும் ஆவேன்
மலையெனப் பெரியோ னாவேன்
　　மணலெனச் சிறுவ னாவேன்
விலைமிகு மாளி கைக்குள்
　　விந்தைசேர் வடிவில் நிற்பேன்
குலைவுறுங் கூரை வேய்ந்த
　　குடிலுக்குந் துணையாய் நிற்பேன்!

*(தளி—கோவில்)

ஆடையை வெளுப்பார் என்மேல்
அடிப்பினும் உதவி நிற்பேன்
ஆடுமென் தலையைப் பற்றி
ஆட்டினும் அரைப்பேன் மாவை
பாடுகள் படுத்தும் அந்தப்
பாவையர் என்னை அம்மி
மேடையில் உருட்டும் போழ்தும்
மிளகுகாய் அரைத்தே நிற்பேன்!

இவ்வணம் உதவல் கண்டும்
இளகிடா மனத்துக் கென்னை
எவ்வணம் உவகை சொல்ல
இசைந்ததோ உலகம்? பாடம்
செவ்வணம் பயிலாப் பள்ளிச்
சிறுவர்தங் கையிற் சிக்கின்
அவ்வவர் விருப்பம் போல
அழிவுகள் பலவுஞ் செய்வேன்!

சிற்றுளி கொண்டே என்னைச்
சிதறிட உடைப்பார் மாந்தர்
மற்றவர் உண்ணும் போது
மறைந்திருந் துடைப்பேன் பல்லை;

கொற்றவர் போலே எண்ணிக்
குனிந்திட லின்றிச் சென்றால்
உற்றவர் அறியும் வண்ணம்
ஒருசிறி திடறி வைப்பேன்!

படியெனக் கிடந்தால் கால்கள்
பதியஎன் தலைமேல் வைப்பார்;
வடிசிலை யானால் தாளில்
வருபவர் தலையை வைப்பார்;
படிகிற நிலையைக் காணில்
பண்பிலார் மிதிப்பர்; ஆனால்
முடியினை நிமிர்த்து நின்றால்
முடங்குவர் என்னே மாந்தர்!

கருவழி கடப்பார் நெஞ்சில்
கடவுளென் றென்னை வைப்பார்;
அருவழி கடப்பார் சாலை
அருகினில் நிறுத்தி வைப்பார்;
இருவரும் எனையே எண்ணி
ஏகுவர் மேலும் மேலும்;
பெருமைகள் அனைத்தும் நானே
பேசுதல் முறைமை யாமோ?

# கடலின் பெயர்கள்

கண்ணுக்கும் எட்டாது கடந்து நிற்கும்
காரணத்தால் உனைக்கடலென் றழைத்தார்
முன்னோர்;
எண்ணுக்குள் அடங்காத புனற்ப ரப்பை
ஏற்றுளதால் பரவையென இயம்பி நின்றார்;
உண்ணற்கோ உவர்ப்புடையாய் அதனா லுன்னை
உவரியெனப் பெயருரைத்தார்; மலையி னின்று
மண்ணுக்குள் ஓடிவரும் எல்லா ஆறும்
மருவியுனைப் புணர்வதனால் புணரி என்றார்.

அளக்கரிது நின்பெருமை எனவு ணர்ந்தே
அளக்கரெனப் பெயரிட்டார்; அலை யெழுப்பி
முழக்குகிற வேலையினை ஓய்வே யின்றி
முப்பொழுதும் செய்வதனால் வேலை என்றார்;
விளக்கமுறச் சொலமுடியா ஆழங் கொண்டு
விளங்குவதால் ஆழியென்றார்; ஆக்க லோடும்
அழித்தலெனக் காத்தலென மூன்று நீர்மை
அமைந்தமையால் முந்நீரென் றானாய் இங்கே,

ஆரமுடன் பவழமெலாம் வாரி வாரி
அளிப்பதனால் பயன்பெறுவோர் வாரி என்றார்;
வாரெனுஞ்சொல் நீட்சிஎனும் பொருளைக்
கொண்ட
வாய்மையினால் நீண்டவுனை வாரி என்று
பேரெழுதி வைத்தனரோ? யாரே கண்டார்!
பேருலகில் அமைதியினைக் காணா தென்றும்
நேரமெலாம் சலசலவென் றொலிப்ப தாலே
நினைச்சலந்தி எனவுரைத்து மகிழ்ந்தார் போலும்!

(27—11—1980)

# மலையிற் பிறந்த மகள்

(கவியரங்கம் திருச்செங்கோடு)

விண்ணகத்து வான்வழியில் நடந்து வந்த
மின்விழியன் இடிக்குரலன் முகிலன் என்பான்,
மண்ணகத்தே திமிர்ந்தெழுந்து நிமிர்ந்து நிற்கும்
மலைமகளின் எழில்கண்டான் காதல்
கொண்டான்

பண்ணிசைக்குங் குயிலினங்கள் பாடி நிற்கப்
பறந்துவரும் சுரும்பினங்கள் வாழ்த்தொலிக்கப்
பெண்ணவட்குக் கொழுநனென ஆகி விட்டான்;
பின்னரவள் மெல்லுடலைத் தழுவி நின்றான்.

பலநிறத்துக் குலமலர்கள் விரிந்து நிற்கப்
பையவரும் மென்காற்று மெய்யில் வீச,
நலமிகுந்த மலைமகளோ தழுவி நின்ற
நாயகன்றன் நெஞ்சத்தைக் குளிரச் செய்தாள்;
கலவிக்குப் பின்முகிலன் துளிகள் சிந்தக்
கருக்கொண்ட மலையரசி உயிர்த்து நின்றாள்;
கலகலத்த குரலெழுப்பும் அருவி என்ற
காதல்மக வீன்றெடுத்தாள் அந்த நங்கை.

பெற்றெடுத்த பிள்ளையினைத் தனது மார்பில்
பேதையவள் தத்திவிளை யாட விட்டாள்;
கற்றொடுத்த இடமெல்லாம் தவழ்ந்து தத்திக்
கனிமரங்கள் இடைப்புகுந்து குதித்துத் தாவி
மற்றடுத்த பள்ளமெலாம் விழுந்தெ ழுந்து
மலர்க்கொடிகள் செடிகள்பல பறித்தெ றிந்து
கற்றடுக்கச் சலசலக்கும் மழலை பேசிக்
கண்குளிர ஆடிவந்த அந்தப் பிள்ளை!

தன்னிடையில் வைத்திருந்த பிள்ளை தன்னைத்
தரையின்மிசை இறக்கிவிட, அருவி என்ற
முன்மருவும் பெயர்மாறி, உருவம் மாறி
முழங்கிவரும் ஆறென்னும் பெயரைப் பெற்றாள்!
பின்னரவள் முல்லைநிலக் காடு புக்குப்
பீடுபெற நடந்துவந்தாள்; முல்லை என்ற
கன்னியொடு தோழமைகொண் டுலவி வந்தாள்;
காடெல்லாம் குழலோசை இனிக்கக் கேட்டாள்!

மருதமெனும் நிலம்புகுந்து தங்கித் தங்கி
மனமகிழ்ந்து நடைபயின்றாள்; உழவ ரெல்லாம்
வருகவென வரவுரைத்தார்; மகிழ்ந்து போற்றி
வாழ்த்துரைத்தார்; கலைபலவும் விரித்து
வைத்தார்;

இருபுறமும் பசுஞ்சோலை செழித்து நிற்க
இயற்கைஎழில் எவ்விடத்தும் குலுங்கி நிற்க
மருவுகிற வயலெல்லாம் பசுமை யாக்கி
மாந்தருளம் செம்மையுற நடந்து சென்றாள்!

மலையகந்தான் ஆற்றுக்குப் பிறந்த வீடு;
வளமலிந்த கடற்பரப்பே புகுந்த வீடு;
தொலைவறியா வளமுடைய முல்லைக் காடு
தூயவட்குச் சிற்றன்னை; அவட்க டுத்த
கலைமலிந்த காமலிந்த மருதம் அந்தக்
காரிகைக்குத் தாய்மாமன், மகிழ்ந்து பெற்ற
தலைமகளைப் புக்ககத்துக் கனுப்பும் போது
தாய்தந்த சீர்வரிசைக் களவே யில்லை!

சந்தனங்கள் தொகுத்தளித்தாள், தினைய ளித்தாள்,
சாதிமரத் தேக்களித்தாள், மதங்கொள் யானைத்
தந்தங்கள் பலவளித்தாள், மணியும் முத்தும்
தங்குதடை யில்லாமல் வாரித் தந்தாள்;
'வந்தெங்கள் கலிதீர்த்த மகளே, வேண்டும்
வளமெல்லாம் வாரிப்போ' என்று சொன்னாள்;
சொந்தங்கள் குறைசொல்லக் கூடா தென்றே
சொலற்கரிய சீர்வரிசை தந்தாள் அன்னை!

முல்லைஎனும் சிற்றன்னை, தன்பால் வந்த
முதல்மகளைத் தலைநீவி உச்சி மோந்து
மல்லிகையால் தலைக்கோலம் செய்து விட்டு
மான்கன்றும் விளையாடத் தந்தாள்; மேட்டுக்

கொல்லைதரும் அவரையொடு வரகு சாமை
 கொழுந்துவரை முதலான பொருள்கள் தந்தாள்;
பல்வகைய மலர்சூட்டிப் பாலும் நெய்யும்
 பரிந்தளித்து வாழ்த்துரைத்து நின்றாள் அங்கு.

மருதமெனும் மாமனவன் தன்பால் வந்த
 மலையரசி மகளைத்தா மரைமு கத்தால்
பெருமகிழ்வு காட்டிவர வேற்று நின்றான்;
 பேராம்பல் மலர்சூட்டி வாழ்த்தி நின்றான்;
மருமகளின் மனமகிழ நெல்ல ளந்தான்;
 வாழையொடு கமுகுதரும் குலைகொ டுத்தான்;
திருவுடையன் வளம்பலவும் உவந்த ளித்துச்
 செங்கரும்பும் வந்தவட்குத் தந்து நின்றான்.

பெற்றவரும் மற்றவரும் மகிழ்ந்து தந்த
 பெருமைமிகு சீர்வரிசை அனைத்துங் கொண்டு
நற்றுணைவன் கடற்பேரான் அவனை நோக்கி
 நயந்தோடி நலம்பாடி விரைந்து சென்றாள்;
மற்றவனும் பெருமகிழ்வால் அவளைத் தாவி
 மார்பிறுக மனமுருக அணைத்துக் கொண்டான்;
பெற்றுவரும் வரிசைஎலாம் கொள்க என்றாள்;
 பெருமகனோ அலைக்கையால் கொள்ளேன்
 என்றான்.

# வான்மழையே வா!

வான்மழையே! வளங்களெல்லாம் வழங்குந்தாயே!
　வளர்கருணைக் கருமேனி வெள்ளை யாகி
ஏன்மழையே பொழியாது வஞ்சித் தாய்நீ?
　இருநிலத்துக் கலிபடர உளங்கொண் டாயோ?
ஆன்முதலாம் உயிரினங்கள் கதறு கின்ற
　அகவலெல்லாம் படவிலையோ நினது காதில்?
ஈன்வயிறு மக்களிடர் கண்டும் வாளா
　இருந்திடுமேல் மருட்பாடு தோன்று மன்றோ?

நெடிலடியால் நீநடக்க வேண்டு கில்லோம்
　நிலஞ்சிரிக்க அவளடியால் நடந்தாற் போதும்;
அடிகுறையுஞ் சிந்தடியால் கால்கு றைந்த
　குறளடியால் அடிபிறழ ஊர்ந்து வந்தால்
படிவறளும் படியாகும்; பருவத் தேஇப்
　படிநடந்தால் எப்படியிவ் வுலகம் உய்யும்?
இடிதவழக் கொடிபடரும் மின்னல் பாய
　ஏரடிகள் நடைபயில வருவாய் இன்றே!

(படிவறளும்— பூமி வறண்டு போகும். ஏர்— கலப்பை)

அசையாத பொருளுக்கும் உலகில் உள்ள
அசைகின்ற பொருளுக்கும் பசையாய் நிற்பாய்!
இசையால்நின் சீர்முழுவதும் எடுத்துச் சொல்ல
எழுத்தனைத்தும் சேர்த்தாலும் முடியா தம்மா!
நசையால்நின் னடிதொட்டுத் தொடைகள் சூட்டி
நாளெல்லாம் தொழுகின்றோம் அழுது நின்றோம்
பசியாலே தளையுண்ட மக்க ளுக்குப்
பாலமிழ்தம் பொழிவதுநின் கடமை யன்றோ?

ஏருழவன் பாட்டுக்குப் பொழிப்பு மோனை
இணைமோனை யாகிஅணி கூட்டி நிற்பாய்!
மாரியென நின்பெயரைச் சொல்ல லன்றி
மாறியென ஒருநாளும் உரைத்த தில்லை;
பாருழல முரண்டொடையாய் மாறி நின்றாய்!
பயன்முழுதும் செந்தொடையாய் மாறிற் றம்மா!
காருனது மனத்தியைபுத் தொடைபொ ருந்தக்
கருணைமழை பொழிந்தருள்வாய் உலகம் உய்ய!

மயங்கிசையும் தாழிசையும் கேளா வண்ணம்
மழையோசை கேட்கட்டும்; செய்யுள் எல்லாம்
பயன்கெழுமி வளங்கொழிக்கத் துள்ளல் ஓசை
பரவட்டும் வனப்புமிகும் இல்ல மெல்லாம்
வயங்கிழையார் வளையோசை பொங்கப் பொங்கல்
வழங்கட்டும்; புறநடையில் மாந்தர் செல்லா
தியங்கட்டும்; ஒழுகிசைவான் வழங்க எங்கும்
இன்பமெலாம் பொங்கட்டும், மழையே வாவா.

(வான்பொய்த்த போது வருந்திப் பாடிய பாடல்.)

(பாடலில் யாப்பிலக்கணச் சொற்கள் பயின்று வந்துள்ளன. அவற்றின் பொருள் நயங்கண்டு மகிழ்க.)

(9—12—74)

# உயிர்ப்பொம்மை

பத்துத் திங்கள் பரிவுடன் வயிற்றில்
வைத்துக் காத்து வளர்த்ததோர் பூஞ்செடி;
மனத்தில் ஊறிய மாசறு நினைவுகள்
அனைத்தும் சேர்தரத் தளிர்த்த பசுந்தளிர்;
இருவர் அன்பும் இணைந்து பிணைந்து
மருவிய நாளில் மலர்ந்ததோர் அரும்பாம்;
இருவிழி குளிர ஈன்றோர் மகிழக்
குறுகுறு நடைபயில் கோலச் சிறுதேர்;
பொருளொடு புணராப் புதுவகை மொழியைச்
சிறுமலர் வாயால் சிந்திடும் பைங்கிளி;
சுருள்படு சிறுமுடி, மருள்நிறை கருவிழி,
எழில்தவழ் செவ்விதழ், இணையிலாக் குறுநடை,
தளிர்நிகர் சிறுவிரல், தங்கத் திருநிறம்,
குளிர்மொழி அனைத்தும் கொளும்உயிர்ப்
பொம்மை;
அம்மக வுயிரை அருந்திய நோயினை
அம்மையென் றறைகுவர்; அடுக்குமோ அப்பெயர்?
எங்கே அவ்வெழில்? எங்கே அவ்வுயிர்?

எங்கே எங்கே என்றுநான் கதறினேன்;
பெற்ற வயிற்றில் பற்றிய தீயை
மற்றவர் எவ்வணம் மாற்றுவர்? எனினும்
என்விழி நீரை எடுத்தெடுத் தூற்றினேன்
நின்னழல் தணிந்து நிமிர்ந்தெழு தாயே!

*(குழந்தையைப் பிரிந்த தாய்க்குக் கூறிய ஆறுதல்.)*

(25—9—1975)

# நெஞ்சிற் புகுந்த வேல்

அறிவும் பண்பும் அமைதியோ டெழிலும்
செறிதரு திருமுகம் மருவிய குழலி!
முகமல ரிதழில் தவழ்தரு மூரலில்
தொகைநூ லினிமை தோன்றுதல் கண்டேன்;
உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் உரைக்கும்
கள்ளம் அறியாக் கயல்விழி கண்டேன்;
ஆறாம் வகுப்பே தேர்நீ, ஒருபிழை
நேரா தெழுதும் நேர்த்தி கண்டேன்;
பிள்ளைமை நிலையிலும் பெரியவள் போல்நீ
என்னை ஓம்பிய இயல்புங் கண்டேன்;
பெதும்மை நின்னை வியந்து புகழ்ந்தேன்.
ததும்பும் இனிமைத் தமிழை நின்வாய்
மழலை வடிவில் தருமென மகிழ்ந்தேன்;
அழகோ வியமே! இம்மகிழ் வெங்கே?
பூசாச் செம்மை பொருந்திய நின்னிதழ்
பேசா தெனலும் பேதுற் றயர்ந்தேன்;
ஆண்டவன் படைப்பென அன்னை நவின்றனள்

ஈண்டவன் யாண்டுளன்? எனயான் வெகுண்டு
கொடியன் அவனைக் கொல்லுவன் பாய்ந்தெனத்
தொடுவேல் எடுத்துத் துணிந்து நடந்தேன்;
எங்கோ மறைந்தனன்! எடுத்தஅவ் வேலைப்
பொங்குமென் னெஞ்சிற் புகுத்திக் கொண்டேன்;
தின்நா மொழிபுகல் நாள்வரின் நெஞ்சிற்
பாய்வே லதனைப் பறித்தெறி வேனே!

*(புதுச்சேரி கவிதைச் செல்வர் கல்லாடன் மகள் திருக்குழலி பேசாமையறிந்து மனம் நொந்து பாடியது.)*

(4—5—1987)

# ஆசையெனும் ஆழ்கடலில்

ஆசையெனும் ஆழ்கடலில் வலைவீசினான்
அதிற்கிடைக்கும் மீன்களுக்கு விலைபேசினான்
காசுபெற வேமனிதன் நிலைமாறினான்
கண்ணியத்தை விற்பதற்கும் விலைகூறினான்!

காதலெனும் மீனதனைக் கண்டுபிடித்தான்
கலியாணச் சந்தையிலே கொண்டுகொடுத்தான்
போதுமென்ற நெஞ்சமின்றி நின்றுதுடித்தான்
போதாமல் தான்தனியே கண்ணீர்வடித்தான்!

வாணிகத்துப் பெருமீனைப் பற்றநினைத்தான்
வஞ்சகத்தைத் தூவியதைச் சுற்றி வளைத்தான்
நாணயத்தை நேர்மையுடன் கொன்றுமுடித்தான்
நாள்முழுதும் கொள்ளையிடும் நெஞ்சுபடைத்தான்!

சொன்னதெல்லாம் நம்புகிற மாந்தரிடத்தே
தொண்டெனுமோர் போர்வையினைப் போர்த்து நடித்தான்
கன்னமிடுங் கோல்களின்றிக் காசுபறித்தான்
கலக்கிவிட்ட நீரதனில் மீன்கள்பிடித்தான்!

(1—1—1982

# எத்தனைப் பாடல்கள்!

முதலில் கேட்பது தாலாட்டு
முடிவில் முகாரி எனும்பாட்டு
இதனிடை வாழும் மனிதனவன்
எத்தனைப் பாடலைப் பாடுகிறான்!
— முதலில்

காதல் இன்பங் கனிந்திடும் ஒன்று
கலக்கம் ஏக்கம் கலந்திடும் ஒன்று
மோதும் அவலம் முகிழ்த்திடும் ஒன்று
முழுதும் அழுகையில் முடிந்திடும் ஒன்று
— முதலில்

குரலும் வீணையுங் குழம்புவ துண்டு
கொட்டிய தாளந் தப்புவ துண்டு
பொருளும் பாட்டும் முரண்பட லுண்டு
பொருளே விளங்காப் பாடலு முண்டு
— முதலில்

விருப்பை வளர்க்கும் பண்களு முண்டு
வெகுளி மிகுக்கும் பாடலுமுண்டு
வெறுப்பைக் கொடுக்கும் ஓசையு முண்டு
வீரமும் மானமும் இடையிடை உண்டு!
— முதலில்

# வாழ்க்கைப் போராட்டம்

*(கலிவெண்பா)*

ஆழம் மிகவுடைய ஆறென்று வாழ்க்கைதனைச்
சூழும் அறிவதனால் சொன்னால் மிகப்பொருந்தும்;
வேகப் புனல்தள்ளி வெள்ளத் தெதிர்நீந்திப்
போகப் பயின்றவரே போற்றுங் கரைகாண்பர்;
வட்டப் பெருஞ்சுழிகள் வாய்திறந்து நிற்பதுண்டு—
எட்டிப் பிடித்திழுத்தே ஏப்ப மிடமுயலும்;
மூழ்கிச் சிலகாலை மூச்சடக்கிச் செல்கின்ற
சூழ்நிலையும் நேர்வதுண்டு சோர்ந்துவிடக் கூடாது;
துன்பம் ஒருகரையாய் இன்பம் மறுகரையாய்,
முன்பே அமைந்த முறைமை யுடையதுதான்;
அந்தக் கரையிலையேல் அவ்வாற்றின் போக்கதனால்
எந்தத் துயர்விளையும் என்றுரைக்க ஏலாது;
கூட்டாய் முகில்பொழியக் கூடிப் புனல்பெருகும்
காட்டாறாய் ஒவ்வொருகால் காண்பதுண் டவ்வாழ்க்கை;
சேறாய்க் கலங்கிச் சிதறிக் கழிநீராய்,
ஊறாமல் ஊர்ந்துவரும், ஓடிக் குழிவீழும்,
நாற்றம் மிகுந்திருக்கும் நாட்டில் சிலர்வாழ்க்கை,
மாற்றி யமைக்க வழியறியா தேங்குகிறார்;

நல்லமலர்ச் சோலைக்கும் நல்வாழ்க்கை ஒப்பென்று
சொல்வதற் குள்ளம் துடிப்பதனால் சொல்கின்றேன்;
செய்கையுடன் பண்பு சிறந்திருக்கும் நன்மனையாள்
மெய்வருடி இன்புறுத்தும் மென்தென்றற்
காற்றாவாள்;
நண்ணி மயக்குறுத்தும் நன்மழலைச் செல்வங்கள்
கண்ணைக் குளிர்விக்கும் வண்ண மலர்க்
கூட்டங்கள்;
பண்ணெழுப்பிப் பூத்தழுவிப் பாடுஞ் சுரும்பொலிகள்
பெண்ணெழுப்பும் பாட்டில் பிணைந்த
குரலிசையாம்;
கொம்புத்தேன் தந்த கொழுஞ்சுவையை வாயிதழின்
வம்புத்தேன் தந்து மகிழ்விக்கும்; ஆதலினால்
நல்வாழ்க்கை ஒப்பாகும் நல்லமலர் சோலைக்கு;
சொல்வார்க்குத் தோன்றாது செல்வார்க்குத்
தோன்றுமிது;
தான்பிறந்த நாள்தொட்டுத் தண்மதியில்
போயிறங்க
வான்பறக்கும் நாள்வரையில் வாழ்க்கைஒரு
போர்க்களந்தான்;
அன்னை கருக்கொள்ளும் அப்பொழுதே கூடுமணு
முன்னம் பொருதன்றே முற்றி உருவாகும்;
பின்னர்ப் பிறந்து பிணிகளொடு போராட்டம்
இன்னும் அளவிலா எத்தனையோ போராட்டம்
மாந்தன் வரலாறே மாபெரும் போராட்டம்

காந்தும் வறுமையொடு கண்மூடிக் கொள்கையெனச்
சீறி வரும்பகையோ செப்பத் தொலையாது
நூறு பகைவரினும் நூறித் தொலைப்பதற்
கூக்கந், துணிவுடைமை, ஓர்ந்துணருங் கூரறிவு,
காக்கும் படையாகக் கைக்கொண்டு போராடி
வெற்றிக் களிப்போடு வீறுநடை போட்டுநலம்
பெற்றுத் திளைப்பதுதான் பேருலக வாழ்க்கைநெறி;
போராட்டங் கண்டஞ்சிப் போகாமல்
வாழ்க்கையெனும்
தேரோட்டி இன்பந் திளைப்பவனே வீரன்;
ஒருபகை கண்டஞ்சி ஓலமிட் டோடி
மருள்பவன் நாளும் மடிகின்ற கோழை;
நிலவுக்கும் வாழ்க்கை நிகராகும், ஒரும்
புலனுக்கு நன்கு புலனாகும் இவ்வுண்மை;
கூடிக் களிப்போர்க்குக் கோடி மகிழ்வுதரும்,
ஊடிப் பிரிந்தோர்க்கோ ஓயாக் கவலைதரும்;
கூறுமிவை வானிலவின் கொள்கையல,
சூழ்நிலைகள்
சேரும் மனநிலையாற் செய்பயனும் வேறாகும்;
சூழ்நிலைக் காளாகிச் சுற்றும் மனநிலையால்
வாழ்வினையும் வெவ்வேறு வாட்டத்திற்,
காண்கின்றான்;

---

(வம்புத்தேன் — புதிய தேன்)

தேய்தலும் பின்வளர்ந்து தேறுதலும் விண்மதிக்
கோய்தலிலாப் பண்பாகும்; வாழ்விலுமுண்
டாதலினால்
வாழ்வை வெறுக்காதீர் வாழும் வகைதெரிந்து
தாழ்வைப் புறங்கண்டு தன்முயற்சி மேலோங்கிப்
போராடி வெற்றிப் புகழ்மாலை கொண்டிடுவீர்
நேரான வாழ்வில் நிலைத்து.

*(மாநிலத் தமிழாசிரியர் மாநாடு, சென்னை)*

(27—12—1968)

# காலம் வரும்-நேரம் வரும்!

(கலிவெண்பா)

மேலைத் திசையெல்லாம் மேற்பரப்பில்
செவ்வொளியை
மாலைக் கதிரோன் மனம்மயங்கப் பாய்ச்சியதால்
வானத்துக் கார்முகில்கள் வண்ணம் பலகாட்ட
நானந்தக் காட்சி நலங்கண்டு மெய்ம்மறந்தேன்;
என்னகத்தே ஆட்சிசெயும் இன்றமிழின் முன்பிறந்த
தென்னகத்தின் சொத்தான தென்றலெனும்
மென்காற்று
வாவி புகுந்து வளர்தா மரைவருடி,
நீவி வரும்போழ்து நீள்மாட மாளிகையில்
தாவிப் படர்ந்துகொடி தள்ளாடும் முல்லைவிரி
பூவிற் படிந்து, புதுமணத்தை மொண்டுகொண்டு,
கொட்டுங் கழைக்கூத்தி கோல்நட்டு வேழம்பர்
கட்டும் நெடுங்கயிற்றில் கால்வைக்கும் பாங்கெனவே
மெல்ல நடம்பயின்றென் மேனியினைத்
தீண்டுதலால்
சொல்லரிய ஓரின்பச் சூழ்நிலையில் நானிருந்தேன்;
கொஞ்சுங் கனியிதழில் கொவ்வைச் சிவப்பேந்தி,

(வேழம்பர் — கழைக்கூத்தர், மஞ்சு — மேகம்.)

மஞ்சின் கருமையெலாம் வார்கூந்தல் மேலேந்தி,
நீண்ட கயல்விழியில் நெஞ்சக் குறிப்பேந்திப்,
பூண்ட சிலம்பொலியைப் பூவடியில் தானேந்தி,
மாநிலத்துப் பூத்த மலரெல்லாந் தந்தஎழில்
மேனியகத் தேந்தியவள் மெல்லியநற் கைம்மலரில்;
ஆவின்பா லேந்தி அழகுச் சிலைபோலப்
பூவின் முகஞ்சுருங்கப் போந்தருகில் நின்றிருந்தாள்!
தென்றலுக்குப் பின்வந்தாள் தெள்ளமிழ்தம் கைக்கொடுத்து
நின்றிருக்கக் கண்டு நிமிர்ந்து முகம்பார்த்தேன்;
செந்தா மரைமுகத்தில் சேர்ந்த சிரிப்பெங்கே?
நந்தா ஒளியெங்கே நன்மலர்ச்சி தானெங்கே?
வந்த துயரத்தை மாற்றும் மருந்தாகும்
இந்த எழில்முகத்தில் ஏக்கம் படருவதோ!
என்று துடிதுடித்தேன் இன்ப நிலைமறந்தேன்
ஒன்றும் புரியாமல் உள்ளம் பதைபதைத்தேன்;
பால்தந்த பாவாய் பசுந்தமிழே என்னுயிரே
சேல்தந்த நின்விழிகள் செக்கச் சிவந்தனவே
நெஞ்சங் கடுக்க நிகழ்ந்த செயலென்ன?
வஞ்சியுன் வாண்முகத்தில் வாட்டம் அரும்புவதேன்?
செந்தமிழ்க்கும் உன்றனுக்குந் தீங்குவர நான்தரியேன்
வந்ததுயர் யாதென்று வாய்விட்டுச் சொல்கண்ணே
என்றுருகி நான்கேட்டேன்; என்றன் உயிரனையாள்
''நன்றுநன்று நும்நடிப்பு! நாடகமோ ஆடுகின்றீர்?

நல்ல படமென்று நாளும் பலர்கூடிச்
செல்லும் அதுகாணச் சேர்ந்துநாம் சென்றுவர
நாலாறு நாளாக நான்கெஞ்சிக் கேட்கின்றேன்
பாலாகத் தேனாகப் பேசிப் பகட்டுகின்றீர்
இன்றென்றும் நாளையென்றும் ஏய்த்து வருகின்றீர்!
ஒன்றென்ன நூறுண்டே உங்கள் விளையாடல்!
அஞ்சாறு திங்களா ஆரணிப் பட்டொன்று
கெஞ்சாத நாளில்லை கேளாத நேரமில்லை
காஞ்சிபுரப் பட்டா கனத்தவிலை என்பதற்கு?
வாஞ்சை யிருக்குமெனில் வாங்கித் தருவீர்கள்;
இன்னும் புகல்வதெனில் எவ்வளவோ ஈங்குளவே!''
என்னும் மொழிகூறி ஏந்திழையாள் ஊடிநின்றாள்;
ஆடல் மயிலணங்கே ஆருயிரே தேன்மொழியே!
ஊடல் மிகுந்தமையால் உள்ளம் புலந்தனையோ?
ஆரணி ஒன்றென்ன ஐம்பதுடன் காஞ்சிபுரம்
நூறணியக் காலம்வரும் நேரம்வரும் நுண்ணிடையே
ஊடல் தவிர்ந்தெழுக உன்மகிழ்வே என்மகிழ்வு
பாடல் தருஞ்சுவையே பண்பின் உறைவிடமே
இன்றே படங்காண ஏகுவோம் நீசென்று
நன்றே உடைமாற்றி வாவென்று நானுரைத்தேன்;
சொல்லி முடிக்குமுனம் துள்ளிக் குதித்தெழுந்
தல்லிக் கொடிபோல் அசைந்தோடி உட்புகுந்து
செப்புச் சிலைபோல ஒப்பனைகள் செய்துவந்தாள்
அப்பப்பா என்னே அழகு!

(திருப்புத்தூர் 8—6—1965)

# அவள்தான் பாடவைத்தாள்!

அவள்தான் என்னைப் பாட வைத்தாள்
அவனியிற் பெரும்புகழ் சூடவைத்தாள்
—அவள்தான்

பாலா கினும்சுவைத் தேனாகினும்
பாகா கினும்தரும் கேளாமலே
நாலா யிரங்கவி நூலாகவே
நான்பாடு வேன்அவை பாராமலே
—அவள்தான்

கொஞ்சம் வருவாய் எனநான் அழைப்பேன்
கொஞ்ச வருவாள் என்னுளம் அணைப்பாள்
வஞ்சி எனநான் வாய்விட் டழைத்தால்
வஞ்சியேன் வஞ்சியேன் என்றுளந் துடிப்பாள்
—அவள்தான்

கண்ணசை வாலொரு காப்பியம் படிப்பாள்
கையசை வாலெழில் ஓவியம் படைப்பாள்
பெண்ணியல் யாவையும் என்னிடங் கொடுப்பாள்
பெரும்பெருங் காப்பியம் தரும்படி உரைப்பாள்
—அவள்தான்

# புதிய உலகம்

அழகொழுகுந் தாமரைப்பூ மலர்ந்து காட்ட
அதன்நடுவே இருகுவளை விரிந்தி ருக்க
எழில்தவழும் எள்ளின்பூ எடுப்பாய் நிற்க
இனியநிறத் தரக்காம்பால் அவிழ்ந்து தோன்ற
கொழுமுகைகள் செறிமுல்லை வரிசை காட்டக்
குவிகமல மொட்டிரண்டு நிமிர்ந்து நிற்கச்
செழுமையுறு செங்காந்தள் விரிந்து தோன்றச்
செப்பரிய மெல்லியநல் லனிச்சம் தாங்கி

ஒசிந்தாடி வருகின்ற கொடியைக் கண்டேன்
உள்ளமெலாம் நயந்தோடி உருகி நின்றேன்;
கசிந்தோடும் அன்புக்குக் கரைகள் கட்டிக்
காப்பமைத்தேன்; ஆயினுமவ் வன்பு பொங்கி
வசங்காணாக் காதலெனும் வடிவங் கொண்டு
வாட்டியதால் அக்கொடியின் மலர்கள் தம்மைக்
கசங்காமல் நுகரஎழும் ஆசை காட்டிக்
கண்ணிமைக்க மனமின்றி நோக்கி நின்றேன்;

அவள்முகத்தில் மாங்கதுப்பில் அரும்பி நின்ற
அணிமிகுத்த இளஞ்சிவப்பை, மலையில் மண்ணில்
தவழ்நிறத்துப் பூவிலெலாங் கண்ட தில்லை!
தமிழச்சி நாணத்தின் வண்ணம் போதும்!

குவளைமலர்க் கருவிழியை ஓரம் போக்கிக்
குனிந்துநிலம் கால்விரலால் கிளறி நின்றாள்
தவளமலர் நகைமறைத்த இதழ்கள் மீது
தனித்துடிப்பை முறுவலொடு தவழ விட்டாள்.

பூப்பொறித்த மேலாடை திருத்தி விட்டாள்;
புறமுதுகில் தொங்குகிற சடையை மார்பின்
மேற்புறத்துப் படரவிட்டாள்; பார்த்த பின்னர்
மேலுமதைப் பின்புறத்தே புரள விட்டாள்;
யாப்புறுத்த என்மனத்தைத் துடிக்க வைத்தாள்;
எழிலெல்லாந் தன்னிடத்தே படைத்து வைத்துக்
காப்பளிப்பாள் செய்கின்ற செய்கை எல்லாம்
காதலுக்கோர் அறிவிப்பாம் என்று கண்டேன்.

செம்புலத்துப் பெயல்நீர்போல் இருவர் நெஞ்சும்
சேர்ந்தமையால் இல்லறத்துப் பள்ளி புக்கோம்;
ஐம்புலத்தை ஒருபுலமே யாக்கி யங்கே
அளப்பரிய கலைபலவுங் கற்று வந்தோம்;
அம்புவிக்கு விளக்காக விளங்குந் திங்கள்,
அளவில்பல விண்மீன்கள், அகன்றவானம்;
எம்முளத்தில் புதியகதை பலவுஞ் சொல்ல
இணைகூற முடியாத உலகஞ் சென்றோம்.

# பனி பொழியும் நிலவில்...

துறைதோறுந் துறைதோறுந் தீமை செய்யும்
துணிவுடைய மாந்தர்நிலை எண்ணி எண்ணிக்
கறையேறித் துயரேறிக் கவலை யேறிக்
காதோரம் நரையொன்று நிமிர்ந்து நிற்க
முருகேறும் மலர்க்குழலாள் அதனைக் கண்டு,
'முதுமைவர அறிவிப்போ?' எனநகைத்தாள்;
முறைகேடு கண்டதனால் கவலை விஞ்சி
முதிர்ந்துளதை அறிவிக்குஞ் சின்ன மென்றேன்.

'எதிர்வீட்டுப் பிள்ளைகளைப் பாரும் அத்தான்,
எழுந்தவுடன் புத்தகத்தை எடுப்பார் மாலைக்
குதியாட்டம் முடிந்தவுடன் விளக்கை ஏற்றும்
குறிப்பறிந்து புத்தகத்தைப் படிப்பார் ஈது
மதியூட்டுஞ் செயலன்றோ? பெற்றோர் சொல்லை
மதித்தொழுகும் பாங்கினைத்தான் பாரும்'
என்றாள்;
எதிர்காட்டுங் காலத்தில் முன்னேற் றங்கள்
இருத்தலைமுன் னுணர்த்துகிற செயலீ
தென்றேன்.

தெருக்கடைசி வீட்டிலுந்தான் பிள்ளை யுண்டு,
திரிந்தலையும் போக்கினைத்தான் பார்க்கின்
றோம்நாம்;
உருப்படுமா றொருசெயலுஞ் செய்வ துண்டா?
ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்வ துண்டா?
பொறுப்புடனே புத்தகத்தைத் தொடுவ துண்டா?
புத்திமதி சொன்னாலுங் கேட்ப துண்டா?
வெறுப்படைந்து பெற்றோரே நொந்த துண்டு
வீணாகப் போவதற்கீ தறிவிப் பென்றேன்.

உலகியலின் பலகதைகள் பேசிப் பின்னர்
உணவுண்ணச் சுவையமுது படைத்த ழைத்தாள்;
சிலமொழிகள் உரையாடி உண்ணும் போது
சிறுவிக்கல் ஒலிகேட்டு நீரைத் தந்தாள்;
விலகியது வருவிக்கல், உண்ட பின்னர்
வெளியிடத்தில் சாய்ந்திருந்தேன் அவளும்
வந்தாள்
சிலபொழுதில் பேரேப்பம் ஒன்று விட்டேன்
'செரித்ததென அறிவிக்கும் அறிவிப்' பென்றாள்.

கனிமொழியாள் கொட்டாவி விடுதல் கண்டேன்,
கண்ணிமைகள் இணைவதற்கோ அறிவிப்
பென்றேன்;
இனியவளும் அயர்விழியால் ஆமாம் என்றே
எழுவதன்முன் இருதும்மல் தும்மி விட்டேன்;
'பனிபொழியும் நிலவொளியில் நீண்ட நேரம்
படுத்திருந்தால் தும்மல்வரா தென்ன செய்யும்?
இனியெழுக உள்வருக' என்ற ழைத்தாள்;
என்மனையாள் குறிப்பறிந்தேன் எழுந்து
சென்றேன்.

# அவர் வரவில்லை!

கொய்தமலர் பஞ்சணையில் கொட்டி மகிழ்ந்தேன்
கூந்தலிலே பூமுடித்துப் பொட்டும் அணிந்தேன்
நெய்தஎழில் மென்துகிலைக் கட்டி யிருந்தேன்
நெஞ்சமதில் ஆசையெனும் மொட்டும் அவிழ்ந்தேன்

காத்திருந்து காத்திருந்து கால்கள் தளர்ந்தேன்
காணவிலை நான்துடித்து நெஞ்ச முடைந்தேன்
பார்த்திருந்து பார்த்திருந்து கண்கள் சிவந்தேன்
பாதிஉயிர் தாங்கியுள மெய்யும் சுமந்தேன்!

தென்றலது சாளரத்துள் பாய்ந்து வருமே
தேனிலவு வானிடையே காய்ந்து வருமே
கன்றியுடல் மெல்லணையில் சாய்ந்து விழுமே
கட்டுமலர் அத்தனையும் காய்ந்து விழுமே!

வந்திடுவேன் நாளையெனச் சொல்லி யகன்றார்
வந்திலரே நாளுடனே என்னை மறந்தார்
அந்தஒரு நாள்பொறுக்க அன்பு பொழிந்தார்
அன்பரவர் தம்முளத்தில் என்ன நினைந்தார்?

(16—3—1982)

# இசை மாறிய வீணை!

காதலெனும் வீணைதனைக் கையிலெடுத்தேன்
கல்யாணி கேட்குமென மீட்டிமுடித்தேன்
மோதியது மற்றஇசை காது கொடுத்தேன்
முன்னையிசை மாறிடவோ ஆசைபடைத்தேன்!

ஓர்நரம்பில் கையமைத்து யாழைஇசைத்தேன்
வேறிடத்தில் மாறிடயார் கையைஅமைத்தார்?
சீர்விளங்கும் பாடலொன்று பாடநினைத்தேன்—
இசை
சேரவில்லை ஆதலினால் நாடிதுடித்தேன்!

மீறிவரும் ஆசையினால் பாடல்படித்தேன்
மாறிவருந் தாளத்தினால் வாடிமுடித்தேன்
யாரிதற்குக் காரணமென் றாவிதுடித்தேன்
ஆறுதலைக் காணவில்லை கண்ணீர்வடித்தேன்!

வேதனையில் வீழ்வதற்கோ வீணையெடுத்தேன்
வீணாகிப் போவதற்கோ மாலைதொடுத்தேன்
சோதனையில் மாள்வதற்கோ ஆசைபடைத்தேன்
சோகஇசை பாடுதற்கோ பாடலமைத்தேன்?

# காதலர் சொல்லாடல்

தலைவன் : பஞ்சணையில் மலர்க்கணைகள்
பார்வையிலே விழிக்கணைகள்
மஞ்சமெனும் போர்க்களத்தில்
மாதரசி வீழ்த்திவிட்டாய்!

தலைவி : பாய்ந்தாலும் விழிக்கணைகள்
பதியவில்லை நின்னுடலில்
காய்ந்தாலும் மாறவில்லை
காயங்கள் என்னுடலில்!

தலைவன் : உள்ளமதிற் காயங்கள்
உண்டாக்கி விட்டதம்மா
கள்ளவிழிப் பார்வையினால்
கலங்கிநிலை கெட்டதம்மா!

தலைவி : தஞ்சமென எனையடைந்தாய்
தலைவாஎன் மனமகிழ்ந்தேன்
நெஞ்சமெனுஞ் சிறையிலிட்டு
நேயத்தாற் கட்டிவிட்டேன்

தலைவன் : சிறைவைத்த பிறகெனக்குத்
திரையென்னும் மறைவெதற்கு?

தலைவி : குறைபட்டுப் போகாத
கூச்சமெனுங் குணமெனக்கு!

தலைவன் : விண்ணுலகக் கனவிருக்க
மண்ணுலக நினைவெதற்கு?

தலைவி : கண்ணெனவே தமிழ்மரபு
காப்பதுதான் பெண்மரபு!

# பருவப் பேச்சு

அவன்: அம்புலிப் பருவம் வந்ததும் வருவேன்
அதுவரை காத்திரு என்றாளே
தண்பனிப் பருவம் தணலாய்க் கொதித்தது
தனிமையில் வாடிடச் செய்தாளே!

அவள்: வருகையின் பருவம் தருவது புரிந்தேன்
வாடிடும் அந்நிலை ஏன்இனியே?
அரிவைஎன் னுள்ளம் நின்வயமாக
அருகினில் இருப்பேன் நான்இனிமேல்!

அவன்: ஊசலின் பருவம் ஆகிய தென்மனம்
ஒருநிலை யின்றி அலைகிறதே
ஆசையின் பெருக்கில் முத்திடும் பருவம்
அளித்திட உன்னை அழைக்கிறது!

அவள்: [1]காப்பின் பருவம் படிப்பதன் முன்னே
கன்னியின் பருவம் நாடுகிறாய்
[2]யாப்பின் பருவம் கடப்பது முறையோ
அதற்குள் ஏனோ வாடுகிறாய்?

---

(1. திருமணம், 2. கட்டுப்பாடு)

அவன்: பிள்ளைத் தமிழைப் பேசிடும் அமுதைப்
பெற்று மகிழ்ந்திட நான்விழைந்தேன்
அள்ளித் தந்திட நின்னை யழைத்தேன்
ஆகும் பருவம் எத்தனையோ?

அவள்: பத்துப் பருவமும் பாடிய பின்னே
பாலப் பருவம் நான்தருவேன்
பெற்றுக் கொண்டபின் தாலப் பருவம்
பிள்ளை மகிழ்ந்திடப் பாடுகநீ!

# காவிய மேடையில்

தலைவன்:

காவிய மேடையில் பாவலன் பாடிய
காரிகை இவள்தானோ?
ஓவியம் வல்லவன் தூரிகை தீட்டிய
ஒருயிர்க் கலைதானோ?

கற்பனை மன்னவன் முத்திரைப் புனைகதை
கண்டிடும் மகள்தானோ?
சிற்பியில் தேர்ந்தவன் சிற்றுளி யாக்கிய
மாதவிச் சிலைதானோ?

தலைவி:

பாரினை யாண்டவர் பாண்டிய மன்னரின்
பரம்பரை இவர்தானோ?
தேரினை ஓர்கொடிக் கீந்திடும் பாரியைச்
சேர்ந்தவர் இவர்தானோ?

கொடியெனப் பூங்கொடி கோட்டையில் கட்டிய
கொற்றவன் இவர்தானோ?
கடலென வீரரின் காவியம் படைத்திடக்
கற்றவர் இவர்தானோ?

(15—3—1982)

# உவமையறியாக் கவிதை

ஒருநாள் இரவில் இதழில்
உணர்வால் எழுதிய கவிதை
மறுநாள் மறுநாள் நினைவில்
மழைபோற் பொழியும் இனிமை!

மங்கிய ஒளியில் அமர்ந்து
மலரணை மீதிற் படிந்து
மங்கலப் பாடலை நினைந்து
மனத்துட் சுவைத்தேன் மகிழ்ந்து!

ஒவ்வொரு சொல்லிலும் உணர்ச்சி
உளத்தைக் கிளறுங் கிளர்ச்சி
அவ்விர வெல்லாம் மகிழ்ச்சி
அடடா எத்தனை மலர்ச்சி!

கைம்மலர் மெல்லெனப் பிடித்துக்
கண்ணொடு கருத்தைத் தொடுத்துச்
செய்ம்முறைப் பாடலை எடுத்துச்
சிவந்தன விழிகள் படித்து!

ஆடவன் என்னுடன் பழகி
அன்புடன் தந்தனன் எழுதி
பாடலை நெஞ்சொடு தழுவிப்
பாரினை மறந்தேன் எளிதில்!

எழுத்துஞ் சொல்லும் பழமை
எழுதும் பொருளோ புதுமை
பழத்தின் சுவைபோற் கவிதை
படைத்தவன் முன்நாள் பதுமை!

புணர்ச்சி விதிகள் எளிமை
பொருளின் சுவையோ அருமை
உணர்ச்சி வடிப்பிற் புதுமை
உவமை யறியாக் கவிதை

(3—4—1982)

# அதுவா இதுவா?

தலைவி:

உறவா பகையா கேட்டு வருவாய் — வரும்
உளமா இலையா பார்த்து வருவாய்
இரவா பகலா இந்தப் பொழுதே
இடரே மிகலால் கண்கள் அழுமே!

தலைவன்:

ஒளியா இருளா இந்த மனையில்
உருவா நிழலா என்றன் விழியில்
விழியா கணையா அந்த விழிகள்
வெயிலா நிழலா சொன்ன மொழிகள்!

தலைவி:

கனவோ நனவோ வந்து மறையும்
கணையோ மலரோ கட்டில் மருவும்
கனலோ புனலோ கண்ணில் வழியும்
கதிரோ மதியோ விண்ணில் தவழும்!

தலைவன்:

விருந்தா மருந்தா உண்ட உணவு
அரும்பா மலரா கொண்ட உறவு
இருந்தால் எழுந்தால் மங்கை நினைவு
இதுதான் அவளால் வந்த விளைவு!

தலைவி:

குழலோ முகிலோ என்று புனைந்தார்
குயிலோ குரலோ என்று மொழிந்தார்
அழகோ கலையோ என்ன நயந்தார்
அறமோ முறையோ இன்று பிரிந்தார்!

தலைவன்:

உயிராய் உடலாய் ஒன்றி யிருந்தோம்
உலகே அதுதான் என்று மகிழ்ந்தோம்
மயிலோ அனமோ என்னும் நடையாள்
மயலே துயரே தந்து நடந்தாள்!

# இரண்டு குழந்தை

ஐம்பதாண் டகவை யடைந்தனை யாகினும்
அம்புலி முகத்தின் அழகிலும் கொவ்வைப்
பழந்தாங் கிதழிற் படர்தரு நகையிலும்
குழந்தையின் பொலிவு குலவுதல் கண்டேன்;
தீதறி யுலகம் தெரியா திருந்தனை
சூதும் வாதும் யாதும் அறிந்திலை
யாதுநீ செய்யினும் பேதுறும் மகவே;
கடிந்துனை ஒருகாற் கழறினும் விழிநீர்
படிந்து சிற்றிளம் பாவை யாகுவை;
என்னுயிர்க் காதலி எவ்வகை நோக்கினும்
பொன்னுருக் குழந்தை போலுனைக் காண்குவென்
எனயான் மொழிந்தேன்; என்னுயிர்த் தெய்வம்
புன்னகை பூத்துப் ''போதும் புகழ்ச்சி
என்னுளத் துறையும் இறைவ நீயும்
குழந்தை யுள்ளம் கொண்டனை யறிவேன்''
எனலும் நகைத்தேன் ''இரண்டு போதும்
இனிமேல் வேண்டா'' என்றனள்
கரும்பு மொழியில் குறும்பு கலந்தே!

(9—4—1983)

# பள்ளிக்கு அழைத்தவள்

### எடுப்பு

பள்ளிக்கு வாவென் றழைத்தவளே — முப்
பாலமு துண்ணென அளித்தவளே
— பள்ளிக்கு

### தொகுப்பு

கள்ளைத்தான் பாலெனச் சாற்றினையோ? நின்
காதலிற் கள்வெறி ஏற்றினையோ?
— பள்ளிக்கு

### முடிப்பு

காலடிப் பேரெழில் கண்டுமயங்கி — எழு
காலடிப் பாவையே உன்னைநெருங்க
நாலடிப் பாதையில் நீநடந்தாய் — உனை
நாடியே வாதையில் நான்கிடந்தேன்!
— பள்ளிக்கு

ஊட்டுவை காமமே என்றுநினைந்தேன் — நீ
'ஓம்புக' மெய்ப்பொருள்' என்றுநடந்தாய்

மீட்டுமுன் அன்பினை நாடி வளைந்தேன்
மேவிய நல்லறம் பாடியணைந்தாய்!
— பள்ளிக்கு

கூடலில் மூப்பினைப் போக்கிவிட்டாய் — இளங்
குமரனென் றென்னையே ஆக்கிவிட்டாய்
ஊடலும் ஏனினி தேன்மொழியே — சொலும்
உன்மொழி யாவையும் தீஞ்சுளையே!
— பள்ளிக்கு

(24—2—1987)

(இருபொருள் அமைந்த பாடலிது)

---

1. தமிழ்:— பள்ளிக்கு-பள்ளிக்கூடத்திற்கு; முப்பால் அமுது - திருக்குறள்; கள்ளைத்தான் - கள்போல் இன்ப வெறியூட்டும் குறளைத்தான்; காதலில்-மொழிப்பற்றில்; காலடி-காற்பங்கான பாடல் வரி; எழுகாலடிப்பாவை- $7 \times \frac{1}{4}$ ஒன்றே முக்கால் அடியுடைய குறட்பாவை; நாலடிப்பாதை-நாலடியாரில்; காமமே-காமச்சுவை மட்டுமே (காமத்துப் பால்) மெய்ப்பொருள்-செம்பொருள் (பொருட் பால்) நல்லறம்-நன்னெறி (அறத்துப் பால்) கூடலில்-நான்மாடக் கூடலில்.

2. காதலி:— பள்ளிக்கு - பள்ளிகொள்வதற்கு; பாலமுது - பாலுணவு; காலடிப் பேரெழில் - காலழகு; எழுகாலடிப்பாவை-நடைபயில எழும் கால்களையுடைய பெண்; நாலடிப்பாதையில்-(ஊடலால்) நான்கு அடித் தொலைவில்; காமம்-இன்பம்; ஓம்புக மெய்ப்பொருள்-உடலோம்புக; நல்லறம் - நல்லறமாகிய இல்லறம்; கூடலில் -உன்னைக் கூடுகையால்.

# சிரித்த முகம்

சிரித்த முகம் வேணுமடி பெண்ணே—அதுதான்
சேவை செய்யும் பெண்களுக்கு
அழகு தரும் கண்ணே! (சிரித்த)

வருத்தங்கள் வாழ்க்கையிலே வந்து வந்து
போகும்—அது
வந்து புகும் வாழ்விலேதான்
இன்பம் வந்து சேரும்! (சிரித்த)

கிள்ளக் கிள்ளத் தேயிலையும்
தழையுது பாரு—கடமை
செய்யச் செய்ய நன்மை வந்து
விளையுது பாரு...
மெள்ள மெள்ளத் துன்பம் வரும்
இயற்கையின் கூறு—அதைத்
தள்ளிவிட்டுக் கடமையிலே
இதயத்தைச் சேரு... (சிரித்த)

மேடு பள்ளம் தாண்டுவதால்
சிதறிவிழும் அருவி—தரை
மேல்விழுந்து ஒன்றுகூடி அமைதியுடன் மருவி
நாடு நலம் செழிப்பதற்கு நாடி வருதல் போலே
நம்மிதயம் பதறிடாமல் பணிபுரிவோம்
அதாலே... (சிரித்த)

1962 இல் வெளிவந்த
(கண்ணாடி மாளிகை திரைப்படப் பாடல்—1)
~~1962 இல்~~

# சீரழிந்து போகாதே

புண்ணான என் வாழ்வில்
பூத்திருக்கும் பொன் மலரே
கண்ணே இம்மண்ணுலகம்
காமுகரின் கோட்டமடி

பாம்பு தேள் வாழ்வது போல்
பாழுலகம் ஆனதடி
தேம்புகிற என் வயிற்றில்
தெள்ளமுதே ஏன் பிறந்தாய்?

கல்லும் கசிந்துருகும்
கண்டவர்கள் நெஞ்சுருகும்
வல்லி நான் பட்டதெல்லாம்
வாய் திறந்து சொன்னாலே. (புண்ணான)

சோலை புகும் வண்டாகிச்
சூழ்ந்து வரும் ஓர் பாவி
ஆலை பிழி கரும்பாக
ஆக்கி எனை ஓட்டிவிட்டான்

பெற்றவரைப் போலிருந்து
பேணி எனை வளர்த்த
உத்தமனைக் கொன்று விட்டான்
உருக்குலையச் செய்து விட்டான். (புண்ணான)
என்ன துன்பம் வந்தாலும்
ஏய்த்து வரும் ஆடவரைச்
சின்னவளே நம்பாதே.
சீரழிந்து போகாதே!

1962 இல் வெளிவந்த
(கண்ணாடி மாளிகை திரைப்படப் பாடல்—2)

# பொய்மைகள் மாயும்

பாதை தெரியுது பார்
பண்பும் அறமும் அன்பும் மலர்ந்திடப் (பாதை)

கோதையர் வாழ்வில் எத்தனை தொல்லை
கொடுமைகள் இழைப்போர் இனிமேல் இல்லை
பேதையராக வாழ்ந்தது போதும்
பெண்களின் துயரம் முடிந்தே தீரும் (பாதை)

பேசும் மொழிகள் தேன் போலே இனிக்கும்
பெரியவர் போலே வேடம் இருக்கும்
பாசமெல்லாம் பிறர் பணத்தினில் இருக்கும்
பகட்டாய் நடிப்பவர் வேடத்தைக் கலைக்கும்
(பாதை)

எண்ணும் நினைப்பினில் எத்தனை வஞ்சம்
ஏனோ மனிதனுக்கு இதுபோல் நெஞ்சம்
மண்ணில் இனிமேல் பொய்மைகள் மாயும்
மாயங்கள் யாவும் வேருடன் சாயும் (பாதை)

1962இல் வெளிவந்த
(கண்ணாடி மாளிகை திரைப்படப் பாடல்—3)

# மையல் தீர

ஒளி விடும் மின்னல் கண்ணாலே
இன்ப வானில் உன்னை நானே கூடிடுவேன்
(ஜிலு ஜிலு)

என்னைக் காணும்போது உள்ளம் துள்ளும்
தன்னாலே துன்பம் செல்லும்
என் இன்பமே தேன் மதுவாம்
மயில் போல ஆடும் என்னைப் போலே
பாரில் இனிமேலே மங்கையில்லையே! (என்னைக்)

எழில் மேவும் மாதர் இல்லையென்றால்
இன்பம் இல்லை இங்கே
இவ்வுலகே பேரிருளாம்
மையல் தீர வாரும் இந்த வேளை
மாறும் இது நாளை—என்பதில்லையே!
(எழில்மேவும்)

1962 இல் வெளிவந்தது

(கண்ணாடி மாளிகை திரைப்படப் பாடல்—4)

# முகக் கண்ணாடி

காட்டிக் கொடுத்துவிடும் கண்ணாடி—முகம்
காட்டிக் கொடுத்துவிடும் கண்ணாடி
கருத்திலிருப்பதை மறைத்து வைக்காமல்
(காட்டிக்)

போட்டிருக்கும் வேடமதை
மூடி வைத்தாலும்
பொய் சொல்லும் வாய் தனைப்
பூட்டி வைத்தாலும் (காட்டிக்)

அயிரை மீனு பதுங்குது
அங்கே குறவை ஒதுங்குது
அந்த மீனும் இந்த மீனும்
அகப்படத்தான் போகுது!

கயிறு மேலே மிதக்குது
மிதப்பும் அங்கே கிடக்குது
கவ்விக் கவ்வித் தூண்டி முள்ளைக்
கெண்டை மீனு இழுக்குது!

(கண்ணாடி மாளிகை திரைப்படப் பாடல்—5)

# பேதமேது?

ஆண் : நாணம் ஏனோ இந்த வேளையிலே—
வண்டு
நாடி ஓடும் மலர்ச் சோலையிலே
நானும் நீயும் இந்த மாலையிலே
நல்ல நாதம் ஆவோம் காதல்வீணையிலே!

பெண்: காதல் வாழ்விலே கதிரென வந்தாய்
காணாத இன்பம் கண்டிடச் செய்தாய்!

ஆண்: கூடும் நமக்குள்ளே உருவம் வேறு—காதல்
கொண்ட நெஞ்சில் பேதமேது?

பெண்: பேதம் யாவுமே தீர்த்திட வந்தாய்-இந்தப்
பேதை நெஞ்சம் மலர்ந்திடச் செய்தாய்

ஆண்: நாணம் ஏனோ இந்த வேளையிலே—
வண்டு
நாடி ஓடும் மலர்ச்சோலையிலே
நானும் நீயும் இந்த மாலையிலே

இருவரும்: நானும் நீயும் இந்த மாலையிலே
நல்ல நாதம் ஆவோம் காதல்
வீணையிலே!

1962

(கண்ணாடிமாளிகை திரைப்படப் பாடல்—6)

# சிரிப்பதேனடி?


பார்த்துப் பார்த்துச் சிரிப்பதேனடி—பாங்கி
பக்கத்திலே அவள் வெட்குவதைக் காணடி—
(பார்த்துப்)

மேற்கில் செங்கதிர் சாயும் போதினிலே—மறைந்து
மெள்ள மெள்ள மெள்ள வந்து காதல்
போதையிலே—
(பார்த்துப்)

கண்ணுங் கண்ணும் ஒன்றாய்ச் சேருதடி— அங்கே
காதலும் நாணமும் மீறுதடி
விண்ணும் மண்ணும் ஒன்றாய் ஆனதடி—அங்கே
வெண்மதி அல்லியை நண்ணிடவே முகத்தைப்
(பார்த்துப்)

1962 இல் வெளிவந்த
(கண்ணாடி மாளிகை திரைப்படப் பாடல்—7)

# நெஞ்சிற் பூத்தவை



கவியரசர் முடியரசன்

பூங்கொடி பதிப்பகம்